

ශ්‍රී ලංකා සුරාබදු දෙපාර්තමේන්තුව
இலங்கை மதுவரித் திணைக்களம்
EXCISE DEPARTMENT OF SRI LANKA

# කාර්යසාධන වාර්තාව
# PERFORMANCE REPORT
# செயல்திறன் அறிக்கை

# 2025

Law Enforcement

Tax Collection

Social Protection

මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
Ministry of Finance, Planning and Economic Development

# செயலாற்றுகை அறிக்கை

# 2025

## இலங்கை மதுவரித் திணைக்களம்

## நிதி, பொருளாதார, கொள்கை அபிவிருத்தி

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் நிதி, பொருளாதார, கொள்கை அபிவிருத்தி அமைச்சின் அரச நிதித் திணைக்களத்தின் ஊடாக அனுப்பப்பட்ட PFD /RED /COPA /2019 /01 ஆம் இலக்க, 2020.01.30 ஆம் திகதிய வழிகாட்டல்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டது.

## 2025 இற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

| | | |
|---|---|---|
| நிறுவனத்தின் பெயர் | - | இலங்கை மதுவரித் திணைக்களம் |
| நிறுவனத்தின் முகவரி | - | இல. 353, கோட்டை வீதி, ராஜகிரிய |
| செலவுத் தலைப்பு இல. | - | 248 - மதுவரித் திணைக்களம் |
| மின்னஞ்சல் | - | excisen@slt.lk |
| இணையம் | - | www.excise.gov.lk |
| தொலைபேசி இல. | - | 0113-888022 |
| தொலைநகல் | - | 0112-877890 |
| 24 மணிநேர அழைப்பு | - | 1913 |

# உள்ளடக்கம்


பக்க இல.

**அத்தியாயம் - 01 நிறுவனத்தின் விபரம் / நிறைவேற்றுப் பொழிப்பு**

1.1 அறிமுகம் 09
1.2 இலங்கை மதுவரித் திணைக்களத்தின் தூர நோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள், பிரதான பணிகள் மற்றும் பெறுமானங்கள் 11
1.3 இலங்கை மதுவரித் திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்பு 14
1.4 இலங்கை மதுவரித் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களின் அமைவிட வரைபடம் 15

**அத்தியாயம் - 02 முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்**

2.1 சிறப்பு அடைவுகள் 18
2.2 எதிர்கால இலக்குகள் மற்றும் சவால்கள் 23
2.3 நலன்புரி 26

**அத்தியாயம் - 03 வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை**

3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று 31
3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று 33
3.3 நிதிப் பாய்ச்சல் பற்றிய கூற்று 34
3.4 நிதிச் செயலாற்றுகைக் கூற்று - மதுவரி வெகுமதி நிதியம் 36
3.5 நிதி நிலைமை பற்றிய கூற்று - மதுவரி வெகுமதி நிதியம் 37
3.6 நிதிப் பாய்ச்சல் பற்றிய கூற்று - மதுவரி வெகுமதி நிதியம் 38
3.7 நிதிக் கூற்றுக் குறிப்புகள் 39
3.8 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை 39
3.9 நி.ஒ.208 ,ன் பிரகாரம் ஏனைய அமைச்சுகள் / திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களத்திற்கு/ மாவட்ட செயலகத்திற்கு/ மாகாண சபைக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடு 39
3.10 நிதியல்லாச் சொத்துகளை அறிக்கையிடலின் செயலாற்றுகை 39
3.11 கணக்காய்வாளரின் அறிக்கை - இலங்கை மதுவரித் திணைக்களம் (இணைப்பு 01) 39
3.12 கணக்காய்வாளரின் அறிக்கை - மதுவரித் பரிசு நிதி (இணைப்பு 02) 39

**அத்தியாயம் - 04 செயலாற்றுகைச் சுட்டிகள்**

4.1 அறிமுகம் 43
4.2 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் 45

**அத்தியாயம் - 05 நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) இனங்காணும் செயலாற்றுகை**

5.1 அறிமுகம் 49
5.2 நிலைபேண்தகு அபிவிருத்தி ,லக்குகளின் அடிப்படையில் இலங்கை மதுவரித் திணைக்களத்தின் செயற்பாடுகள் மற்றும் அவற்றின் முன்னேற்றம் 50

**அத்தியாயம் - 06 மனிதவள விபரம்**

6.1 பதவியணி முகாமைத்துவம் 57
6.2 நிறுவனத்தின் நிறைவேற்றுகையை மனிதவளத்தில் ஏற்படும் குறை அல்லது மிகை பாதிக்கும் முறை 57
6.3 வெற்றிடங்கள் பற்றிய தகவல்கள் 58
6.4 மனித வள அபிவிருத்தி 59

**அத்தியாயம் - 07 இணக்கப்பாட்டு அறிக்கை**

7.1 நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு பங்களிக்கும் முறை பற்றிய இணக்கப்பாட்டு அறிக்கை 65

# அத்தியாயம் – 01

## நிறுவனத்தின் விபரம் நிறைவேற்றுப் பொழிப்பு

1.1 அறிமுகம்

1.2 இலங்கை மதுவரித் திணைக்களத்தின் தூர நோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள், பிரதான பணிகள் மற்றும் பெறுமானங்கள்

1.3 இலங்கை மதுவரித் திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்பு

1.4 இலங்கை மதுவரித் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களின் அமைவிட வரைபடம்

## 1.1. அறிமுகம்

இலங்கை மதுவரித் திணைக்களமானது, நூற்றி பதின்மூன்று வருடங்களுக்கும் அதிகமான வரலாற்றைக் கொண்ட இலங்கையின் அரச வருமானம் சேகரிக்கும் முதன்மை நிறுவனம் ஒன்றாகும். மதுவரி, புகையிலை வரி வருமான முகாமைத்துவம், அதற்கான சட்ட வலுப்படுத்தல் மற்றும் சமூகப் பாதுகாப்பு முப்பரிமாணப் பணிக்கூற்றுகளை நிறைவேற்றுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திணைக்களத்தால் 1912 ஆம் ஆண்டிலிருந்து நூற்றுப் பதின்மூன்று வருட காலத்தினுள் பல விசேட சம்பவங்கள் இங்கு அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், மீளாய்வு வருடமான 2025 ஆம் ஆண்டிலும் வருமானம் சேகரிக்கப்பட்டு அரசிறை வருமானத்தில் பங்களித்தல் தொடர்பில் வலுமிக்க கடப்பாட்டைக் கொண்ட வருடமாக இருந்தது.

இலங்கை மதுவரித் திணைக்களத்தின் மதுவரி ஆணையாளர் நாயகமாக இலங்கைப் பாராளுமன்றத்தின் அமைச்சரவைத் தீர்மானத்தின் பேரில் நான் 2025.07.11 ஆம் திகதி நியமிக்கப்பட்டேன். மீளாய்வு ஆண்டான 2025 இல் இலங்கை மதுவரித் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் நிர்வாக மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளின் பொருட்டு வருமானம், நிர்வாகம், கணக்கியல், மனித வளம், தகவல் தொழில்நுட்பம், சட்ட வலுப்படுத்தல், ஆதரவளிப்பு, கற்கைகள் மற்றும் ஆராய்ச்சி, வழங்கல் தொடர் ஒழுங்குபடுத்தல், சட்டம், சமூக பாதுகாப்பு, உள்ளக கணக்காய்வு மற்றும் புள்ளிவிபரம் ஆகிய பிரிவுகளின் பங்களிப்பு பெறப்படுகிறது.

இதற்கு மேலதிகமாக, கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்தைப் பிரதிநிப்படுத்தும் கணக்காய்வுப் பிரிவொன்றும் இங்கு காணப்படுகிறது.

திணைக்களமானது, நாடு முழுவதும் உள்ள மாகாணங்களில் 13 உதவி மதுவரி ஆணையாளர் அலுவலகங்கள், 31 மதுவரி அத்தியட்சகர் அலுவலகங்கள், 56 மதுவரி நிலையங்கள், 28 மது உற்பத்திச்சாலைகள், 14 வடிசாலைகள், 05 மதுவரி விசேட நடவடிக்கைப் பிரிவுகள், ஒரு போதைப்பொருளிற்கான சட்ட வலுப்படுத்தல் பிரிவு என்பன அடங்கலாக விசாலமான நிறுவகமாக நாடளாவிய சேவையை வழங்குகிறது. அத்துடன் மதுபான, சிகரட் உற்பத்தி தொடர்பான உற்பத்திச்சாலைகளில் அமைந்துள்ள மதுவரிப் பிரிவுகளிலும் நிரந்தரப் பணியாளர் குழாத்தினர் இணைக்கப்பட்டுள்ளனர்.

2025 ஆம் ஆண்டுக்கான இலங்கை மதுவரி திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட வருமான இலக்கு 227.4 பில்லியன் ரூபாயாகும். இந்த மொத்த வருமானத்தை சேகரிக்க மதுபான வரி வருமானத்தின் மூலம் 226.0 பில்லியன் ரூபாவும், புகையிலை வரி வருமானத்தின் மூலம் 1.4 பில்லியன் ரூபாவும் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. 2025 இல், திணைக்களத்தினால் மதுவரி வருமானமாக ரூ.253 பில்லியன் ரூபாவையும் புகையிலை வரி வருமானமாக ரூ.1.5 பில்லியன் ரூபாவையும் சேகரிக்க முடிந்தது. வரி விலக்கு(ரூ.21.6 பில்லியன்) கணக்கிட்ட பிறகு, சேகரிக்கப்பட்ட மொத்த மதுவரி வருமானம் ரூ.254.5 பில்லியனாக இருந்தது. நிறைவேற்றுத்தர மற்றும் பிற அலுவலர் பதவிகளின் பற்றாக்குறை 2025 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் ஒட்டுமொத்த செயல்திறனைக் கணிசமாகப் பாதித்த போதிலும், சேகரிக்கப்பட்ட வருமானம் 112% வளர்ச்சியைப் பதிவு செய்தமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

2025 ஆம் ஆண்டில் நாடு முழுவதும் 34,995 சட்டவிரோத மதுபானம் மற்றும் போதைப்பொருள் சுற்றிவளைப்புகள் மதுவரி அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டதுடன், அறவிடப்பட்ட தண்டப்பணங்களின் எண்ணிக்கை ரூ. 213,043,679.00 ஆகும். மதுவரி உரிமம் பெற்ற நிலையங்களில் 5,176 உரிம நிபந்தனை மீறல்கள் அறிக்கையிடப்பட்டதுடன், அதற்காக அறவிடப்பட்ட கூட்டுத் தண்டப்பணக் கட்டணம் ரூ.121,401,899.00 ஆகும்.

புகையிலை வரிச் சட்டத்தை மீறி நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட சட்டவிரோத தெந்து இலைகள் கைப்பற்றல் மொத்தமாக 110 இடங்களில் மேற்கொள்ளப்பட்டதாக 2025 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டதுடன், இதன் விளைவாக 68,400 கிலோகிராம் தெந்து இலைகள் கைப்பற்றப்பட்டன. இதன் காரணமாக, கூட்டுத் தண்டப்பணம் ரூ.20.5 மில்லியன் மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட 27,567 கிலோகிராம் தெந்து இலைகளின் ஏலத்திலிருந்து ரூ.161 மில்லியன் என்பன அரசாங்க வருமானத்திற்கு வரவு வைக்கப்பட்டது.

மீளாய்வு வருடம் டிசம்பர் 31 ஆம் திகதிய நிலவரப்படி, அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கை 1,649 ஆக இருந்த அதே நேரத்தில், பணியில் உள்ள உண்மையான எண்ணிக்கை 1,140 ஆக இருந்தது, இதன் விளைவாக 509 வெற்றிடங்கள் ஏற்பட்டன - இது அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கையில் 31% இற்கு சமமாகும். 56 திணைக்களம்சார் நிறைவேற்றுத்தர அலுவலர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும், 2025 ஆம் ஆண்டில் 08 அலுவலர்கள் மட்டுமே பணியில் இருந்தனர், இது அந்த வகையில் 85% வெற்றிட விகிதத்தை பிரதிபலிக்கிறது. அங்கீகரிக்கப்பட்ட நிறைவேற்று அலுவலர்களின் எண்ணிக்கையில் முக்கால்வாசிக்கும் குறைவாகவே பணியாற்றிய போதிலும், எதிர்பார்க்கப்பட்ட செயல்திறன் இலக்கில் 100% ஐ எய்தியமை குறிப்பிடத்தக்க விசேட சாதனையாகும்.

2025 ஆம் ஆண்டில், வெற்றிடம் நிலவும் 08 பிரதி மதுவரி ஆணையாளர் பதவிகளின் கடமை மேவுகை 05 உதவி மதுவரி ஆணையாளர்களினால் மேற்கொள்ளப்பட்டது. 03 மதுவரி அத்தியட்சகர்களினால் 05 உதவி மதுவரி ஆணையாளர்களின் கடமை மேவுகை செய்யப்பட்டது. மேலும், 31 மதுவரி அத்தியட்சகர் பதவிகள் பிரதம மதுவரிப் பரிசோதகர்களால் கடமை மேவுகை செய்யப்பட்டன. 08 மதுவரி அத்தியட்சகர் பதவிகளுக்கு பதவி உயர்வு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன. 16 பிரதம மதுவரிப் பரிசோதகர் பதவிகளுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டன.

இந்த சகல கடமைகளையும் நிறைவேற்றும் போது, நிதி அமைச்சு மற்றும் திறைசேரியுடன் தொடர்புடைய சகல அலுவலர்கள் மற்றும் இலங்கை பொலிஸ், இலங்கை சுங்கம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை, புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபை, சட்டமா அதிபர் திணைக்களம், இலங்கை பொலிஸ், இலங்கை கடற்படையினர், அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம், இலங்கை தரக்கட்டளைகள் நிறுவகம், இலங்கை கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை போன்ற நிறுவனங்கள் இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு வழங்கிய ஒத்துழைப்பிற்காக நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

2025 ஆம் ஆண்டில் இலங்கை மதுவரித் திணைக்களத்தின் திணைக்களம்சார் செயலாற்றுகை மட்டத்தை உயர் சதவீதத்துடன் பேணும் பொருட்டு வழங்கிய ஒத்துழைப்பிற்காக இலங்கை மதுவரி திணைக்களத்தின் சகல மதுவரி அலுவலர்களுக்கும் இணைந்த மற்றும் நாடளாவிய சேவை அலுவலர்கள் அடங்கலாக சகல மதுவரி அலுவலர்களிற்கும் எனது நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கின்றேன்.



எம்.பி.என்.ஏ.பேமரத்ன
மதுவரி ஆணையாளர் நாயகம்

## 1.2 இலங்கை மதுவரித் திணைக்களத்தின் தூர நோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள், பிரதான பணிகள் மற்றும் பெறுமானங்கள்

**ශ්‍රී ලංකා සුරාබදු දෙපාර්තමේන්තුව**

Excise Department of Sri Lanka

*"වගකීමෙන් සුරක්ෂාවට"*

"பொறுப்பினூடான பாதுகாப்பு"

*"Protection through responsibility"*

### தூர நோக்கு

மதுபான, புகையிலைக் கைத்தொழிலை முறைப்படி ஒழுங்குபடுத்தலின் ஊடாக அரசிறை வருமான மேம்பாட்டின் பொருட்டு மிகவும் கௌரவமான, பொறுப்புவாய்ந்த அரச நிறுவனமாகத் திகழுதல்.

### பணிக்கூற்று

சட்டரீதியான விற்பனை வருமானத்தை உருவாக்கும் பொருட்டு வசதிகளைத் திட்டமிடலின் ஊடாகவும், அமுல்படுத்த இயலுமான சகல சட்ட, ஒழுங்குவிதிகளிற்கு இசைவாக செயல்வலுப்படுத்தலின் ஊடாகவும், சட்ட விரோத மதுபானம், அபாயகரமான அவுடதங்கள் மற்றும் மனநிலை தடுமாற்றப் பதார்த்தங்களின் பாவனைக்கு எதிராக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்படுத்துவதன் ஊடாகவும், தரமற்ற அற்ககோல் பாவனையினால் ஏற்படும் சுகாதாரக் கேடுகளிலிருந்து பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டும், பொருளாதார வளர்ச்சிக்கும் விருத்திக்கும் ஒத்துழைப்பு வழங்குவதற்காக, நாட்டினுள் மதுபானங்கள் மற்றும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட அற்ககோல்களை வினைத்திறன் மிக்கதாகவும் பயனுறுதி மிக்கதாகவும் நிர்வகித்தல்.

## குறிக்கோள்கள்

- உபாயத்திறன், செயற்பாட்டு மற்றும் மூலோபாய மட்டங்களில் பயன்மிக்க தீர்மானங்களை எடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கும் பொருட்டு நிறுவனம்சார் நோக்கில் இணக்க மேம்பாடு மற்றும் இடர் முகாமைத்துவத்தின் ஊடாக வருமானம் சேகரித்தலை உயர்வுபடுத்துதல்.

- வருமானத்தை உயர்த்தும் நோக்கில் அறிவை தொடர்ச்சியாக பரிமாற்றம் செய்தலின் ஊடாக உரிய சட்டங்களுடன் பங்குதாரர்களின் இசைவை உயர்த்தலின் மூலம் விற்பனைக்கு வசதியளித்தல்.

- மதுபான, புகையிலை வருமானத்தை நிர்வகித்தல் மற்றும் வசதியளித்தல் இடையே சமநிலையைப் பேணும் பொருட்டு அடிப்படையான இடர் முகாமைத்துவக் கோட்பாடுகளில் வினைத்திறன் மிக்க பிரயோகத்தை மேற்கொள்ளல்.

- மதுவரி சேகரித்தலில் நேர்மையையும் வினைத்திறனையும் பிரயோகித்து பொது மக்களின் நம்பிக்கையைப் பேணுதல்.

- மதுபான உற்பத்தி மற்றும் விற்பனை, தூய்தாக்கப்பட்ட மதுசாரம், தன்மை மாற்றப்படாத மதுசாரம் மற்றும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட போதைப்பொருட்களை ஒழுங்கு படுத்தல்.

- சட்ட விரோத மதுபானம் மற்றும் போதைப் பொருட் பாவனைக்கு எதிராக தொடர்ச்சியாக நடவடிக்கைகளை அமுல்படுத்தலும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதலும்.

- சட்ட விரோதமாக மதுசாரம் வடித்தல் மற்றும் இரகசியமாக உரிமம் இன்றி மதுசாரம் வடித்தல் என்பவற்றிற்கு எதிராக சட்ட ஒழுங்கு விதிகளை செயல்வலுப்படுத்தல்.

- மதுபான, போதைப்பொருட் பாவனையைத் தடுத்தல் மற்றும் போதைப்பொருள், மனோவசியப் போதைப்பொருட்களை சட்ட விரோதமாக ஏற்றி இறக்கலை தடுத்தல்.

- நச்சு போதைப்பொருள் மற்றும் நச்சு மதுபான விற்பனையை ஒழித்தலும் அவற்றைப் பாவித்தலில் இருந்து பொது மக்களைப் பாதுகாத்தலும்.

- தொடர்ச்சியான பயிற்சி மற்றும் அபிவிருத்தி ஊடாக போதியளவு தொழில்சார் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்கள் இருத்தலை உறுதிப்படுத்துவதற்காக பணியாளர்களின் இயலுமையை விருத்தி செய்தலும் கொள்ளளவைக் கட்டி எழுப்பலும்.

- அதியுயர் திருப்தி மற்றும் முறையான பயிற்சியுடனான அர்ப்பணிப்பு மிக்க அலுவலர்களைப் பேணுதல்.

- நிதி அமைச்சு மற்றும் ஏனைய வெளியக நிறுவனங்களுடன் நல்லுறவைப் பேணுதல் மற்றும் வினைத்திறன் மிக்க வரி முறைமையைப் பேணுதல்.

# பணிகள் மற்றும் பெறுமானங்கள்


## பணிகள்

- மதுவரி உரிமம் பெற்ற சகல நிலையங்களையும் மேற்பார்வையிடுதல், நிர்வகித்தல் மற்றும் அவற்றிலிருந்து கிடைக்க வேண்டிய வருமானத்தை சேகரித்தல்.
- மதுவரிக் கட்டளைச் சட்டம், புகையிலை வரிச்சட்டம் என்பவற்றை வினைத்திறன் மற்றும் பயனுறுதி மிக்க முறையில் செயல்வலுப்படுத்தல்.
- நஞ்சுகள், அபின், அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச் சட்டத்தினை அமுல்படுத்தும் நிறுவனமாக செயலாற்றுதல்.
- நாட்டின் சமூகப் பாதுகாப்பின் பொருட்டு புகையிலை மற்றும் அற்ககோல் மீதான தேசிய அதிகார சபைச் சட்டத்தினை அமுல்படுத்துதல்.
- இலங்கைப் பொலிஸ், சுங்கம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் போன்ற ஏனைய சட்ட வலுப்படுத்தும் நிறுவனங்களுடன் நெருங்கிய தொடர்பைப் பேணுதல்.
- சட்ட விரோத மதுபானம், போதைப்பொருட்களிற்கு எதிராக நிறுவன நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக தெளிவுபடுத்தல் மற்றும் சட்ட விரோத மதுபானம், அபாயகர அவுடதங்களின் ஆபத்து பற்றி மாணவர்கள் மற்றும் சமூகத்தை தெளிவுபடுத்தல்.
- 2008 இன் 01 ஆம் இலக்க போதைப்பொருட்கள் மற்றும் மனோவசியப் பொருட்களை சட்ட விரோதமாக ஏற்றி இறக்கலுக்கு எதிராக சமவாயத்தை அமுலாக்குதல்.
- திட்டமிடப்பட்ட வருடத்தினுள் சகல மட்ட பணியாளர்களிற்கும் பயிற்சிகளை வழங்குதல்.
- கூட்டங்கள், கலந்துரையாடல்கள் பொருட்டு சகல தரப்பினருடனும் வினைத்திறன் மிக்க பங்களிப்பை வழங்கல்.


## பெறுமானங்கள்

- அனைவரையும் சமமாக நடத்தும் நட்பு மற்றும் வெளிப்படையான தன்மையுடைய சேவையை வழங்கும் கலாச்சாரத்தைப் பேணுதல்.
- இறுதி இலக்கை நோக்கிச் செல்லக்கூடிய, குழு மனப்பான்மையுடன் சேவையாற்றக் கூடிய அலுவலர்களைக் கொண்டிருத்தல்.
- பாதுகாப்பான எதிர்காலத்தின் பொருட்டு எதிர்கால சந்ததியினருக்கு சரியான வழிகாட்டலின் நோக்கில் சட்ட விரோத மதுபான, போதைப்பொருட்களை ஒழித்தற்கு நடவடிக்கை எடுத்தல்.
- மானிடப் பெறுமதியை மதிக்கும் தனிநபர் ஒருவரை சமுகமயமாக்குதல்.
- முறையான உபாயத்திறன் மிக்க திட்டத்தில் நடவடிக்கை எடுத்தல். புதிய தொழில்நுட்ப முறையின் கீழ் பயனாளிகளிற்கு வினைத்திறன் மிக்க, அதியுயர் சேவையை வழங்குதல்.
- நவீன தொழில்நுட்ப முறையின் கீழ் சரியான முறையில் வரி சேகரித்தல்.
- நம்பகரமான தரவுத் தளத்தைப் பேணுதல்.
- நச்சு போதைப்பொருட்கள் மற்றும் நச்சு மதுபானப் பாவனையை இழிவுபடுத்தும் பொருட்டு நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதல்.
- வெளியக நிறுவனங்களுடன் நல்ல ஒருங்கிணைப்பைப் பேணுதல்.

## 1.3 இலங்கை மதுவரித் திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்பு



## 1.4 இலங்கை மதுவரித் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களின் அமைவிடங்கள்



# அத்தியாயம் - 02

## முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

2.1 சிறப்பு அடைவுகள்

- 2.1.1 வருமானம்
- 2.1.2 நிர்வாகம்
- 2.1.3 கணக்கியல்
- 2.1.4 தகவல் தொழில்நுட்பம்
- 2.1.5 சட்ட வலுப்படுத்தல்
- 2.1.6 ஆதரவளிப்பு
- 2.1.7 கற்கைகளும் ஆராய்ச்சியும்
- 2.1.8 வழங்கல் தொடர் ஒழுங்குபடுத்தல்
- 2.1.9. சட்டம்
- 2.1.10. சமூகப் பாதுகாப்பு
- 2.1.11 உள்ளகக் கணக்காய்வு
- 2.1.12 புள்ளிவிபரம்

2.2 எதிர்கால இலக்குகள் மற்றும் சவால்கள்

- 2.2.1 எதிர்கால இலக்குகள்
- 2.2.2 சவால்கள்


2.3 நலன்புரி

- 2.3.1 அலுவலக நலன்புரி
- 2.3.2 விளையாட்டுகள்

## 2.1 சிறப்பு அடைவுகள்

### 2: 1: 1 வருமானம்

இலங்கை மதுவரித் திணைக்களம் 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நிதி அமைச்சிற்கு சமர்ப்பித்த செயல் திட்டத்தின்படி, மதுவரி மற்றும் புகையிலை வரி வருமான இலக்காக ரூ.227.4 பில்லியன் என வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, மதுவரி வருமானமாக ரூ.253 பில்லியன் உம் புகையிலை வரி வருமானமாக ரூ.1.5 பில்லியனும் சேகரிக்கப்பட்டதுடன், 2025 இல் மொத்த வருமானமாக ரூ. 254.5 பில்லியன் சேகரிக்கப்பட்டது. மேலும், ஏற்றுமதி செய்யப்பட்ட மதுபானத்திற்காக 25,718,623.60 அமெரிக்க டொலர்களையும் 121,096.50 யூரோக்களையும் 38,750.00 ஸ்ரேலிங் பவுண்களையும் அந்நியச் செலாவணியாக நாடு பெற்றுள்ளது. 2024 உடன் ஒப்பிடும்போது, 2025 இல் மதுபான வரி வருமானம் 10% இனாலும் மதுபான உற்பத்தி 11% இனாலும் அதிகரித்துள்ளது. மேலும், மதுபானம் மற்றும் புகையிலை வரி வருமானத்தின் சேகரிப்பு வளர்ச்சி 111.9% ஆகும். 2024 உடன் ஒப்பிடும்போது 2025 இல் புகையிலை வரி வருமானம் 8% அதிகரிப்பைக் காட்டுகிறது.




- மேலும், மதுபானம் மற்றும் மென் மதுபானங்கள் ஏற்றுமதி மீதான ரூ.21.6 பில்லியன் ரூபா மதுவரி விலக்களிப்பின் பின்னர் ரூ.232.96 பில்லியன் நிதி பொதுத் திறைசேரிக்கு அனுப்பப்பட்டது.

### 2:1:2 நிர்வாகம்

- 2025 ஆம் ஆண்டில், 08 பிரதி மதுவரி ஆணையாளர் பதவிகளுக்கான கடமை மேவுகை 05 உதவி மதுவரி ஆணையாளர்களினால் மேற்கொள்ளப்பட்டன.

- மதுவரி அத்தியட்சகர் பதவிகளுக்கு மிகை சேவை அடிப்படையில் 67 பேரை நியமிப்பதற்கு 2025.04.05 ஆம் திகதி பரீட்சை நடத்தப்பட்டு அதில் தகைமை வாய்ந்த 18 பேருக்கு நேர்முகப்பரீட்சை 2025.07.08 ஆம் திகதி நடத்தப்பட்டதுடன், அதன் பெறுபேற்று ஆவணம் அரச சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

- மூன்றாம் நிலை மட்டத்தின் பதவி உயர்வு பொருட்டு 16 பிரதான மதுவரிப் பரிசோதகர்களுக்கு 2025.09.10 ஆம் திகதி ஆட்சேர்ப்பு நடைபெற்றது. வரையறுக்கப்பட்ட அடிப்படையில் 22 மதுவரிப் பரிசோதகர்களுக்கு 2025.01.17 ஆம் திகதியும் திறந்த அடிப்படையில் 33 மதுவரிப் பரிசோதகர் பதவிகளுக்கு 2025.11.03 ஆம் திகதியும் நியமனம் வழங்கப்பட்டது.

- இரண்டாம் நிலை மட்டத்தின் பதவி உயர்வு பொருட்டு தேர்ச்சி அடிப்படையில் 27 மதுவரி சார்ஜன் மேஜர் பதவிகளுக்கு 2025.10.13 ஆம் திகதி நியமனங்கள் வழங்கப்பட்டன.

- மதுவரி சார்ஜன் பதவியின் வெற்றிடத்துக்கு பதவியுயர்வாக, 2021 ஆம் ஆண்டிற்கு ஏற்ப மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் 07 வெற்றிடங்கள் 2025.02.25 ஆம் திகதியும் 2022 ஆம் ஆண்டிற்கு ஏற்ப தேர்ச்சி அடிப்படையில் 14 வெற்றிடங்கள் 2025.04.30 ஆம் திகதியும் பூர்த்தி செய்யப்பட்டது. மேலும் 2022 ஆம் ஆண்டிற்கு ஏற்ப மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் 22 வெற்றிடங்கள் 2025.07.29 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட்டது.

- இரண்டாம் நிலை மட்டத்தின் மதுவரிக் காவலாளர்களின் 11 பதவிகளுக்கு 2024.07.24 ஆம் திகதி முதல் செயல்வலுப்பெறும் வகையில் நியமனம் வழங்கப்பட்டதுடன், 100 மதுவரிக் காவலாளர் பதவிகளுக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புக்காக தகைமை வாய்ந்த 50 விண்ணப்பதாரருக்கு முதல் தொகுதியாக 2026.02.02 ஆம் திகதி பயிற்சி ஆரம்பிக்கப்படவுள்ளது. 12 மதுவரிக் காவலாளிச் சாரதிப் பதவிகளுக்காக 2025.02.10 ஆம் திகதி நியமனங்கள் வழங்கப்பட்டன.

- மேலும், திணைக்களத்தின் அனைத்து பணியாளர்களுக்கும் 988 சம்பள ஆண்டேற்றங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அக்ரஹார காப்புறுதிக் கடன் திட்டத்தின் கீழ், 122 விண்ணப்பங்கள் தொடர்பாக நன்மைகளை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள அதேவேளை, 28 சீருடைப் பணியாளர்கள் மற்றும் 07 சிவில் பணியாளர்கள் ஓய்வு பெற்றமையால், இது தொடர்பாக ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

- மேலும், இந்தத் திணைக்களத்தைச் சேர்ந்த அனுரதபுரம், நுவரெலியா சுற்றுலா பங்களாக்களிற்கு 204 முன்பதிவு 2025 இல் செய்யப்பட்டுள்ளன. மேலும், சீருடைப் பணியாளர்கள் மற்றும் சிவில் பணியாளர்களுக்கு 60 உத்தியோகபூர்வ அடையாள அட்டைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- 2025 இல் விண்ணப்பித்த 53 அலுவலர்களுக்கமைய சீருடைக் கொடுப்பனவுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவ்வாறே 2025 இல் திணைக்கள அலுவலர்களின் 326 இடர் கடன் விண்ணப்பத்திற்கு அமைய கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவ்வருடத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 215 பண்டிகை முற்பண விண்ணப்பங்களுக்கு அமைய கொடுப்பனவிற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- இந்தப் பிரிவின் ஊடாக, திணைக்களத்துடன் இணைக்கப்பட்டுள்ள 1180 அலுவலர்களின் லீவு தொடர்பான அனைத்து விடயங்களும் கையாளப்படுகிறது. திணைக்களத்தின் நாளாந்த அஞ்சல் மூலம் திணைக்களத்திலிருந்து அனுப்பப்படும் கடிதங்களின் எண்ணிக்கை நாளாந்தம் 80 ஐத் தாண்டுவதுடன் 2025 ஆம் ஆண்டில் இது அண்ணளவாக 15,000 ஆகும். மேலும், பெறப்படும் கடிதங்களின் எண்ணிக்கை நாளாந்தம் 100 இலும் அதிகமாக உள்ளதுடன், 2025 ஆம் ஆண்டில் இது அண்ணளவாக 25,000 ஆகும். 2024 ஆம் ஆண்டிற்கான திணைக்களத்தின் சீருடைப் பணியாளர்களின் வினைத்திறன் தடைகாண் பரீட்சைகள் இந்த ஆண்டு நடத்தப்பட்டுள்ளன. இந்தப் பணிகளுக்கு மேலதிகமாக, சீருடைப் பணியாளர்களின் வருடாந்த மற்றும் வருடாந்தம் சாரா இடமாற்றங்கள் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும், திணைக்கள அலுவலர்களுக்கு புகையிரத ஆணைச்சீட்டுகள் வழங்குவதும் இந்தப் பிரிவால் கையாளப்படுகின்றன.

## 2:1:3 கணக்கியல்

2025 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின்படி, ரூ.2,886,500,000.00 பெறுமதியான மீண்டுவரும் செலவின ஒதுக்கீட்டில், ரூ.2,699,314,951.00 செலவிடப்பட்டுள்ளதுடன், இது மொத்தத்தில் 93.52% ஆகும். இதேபோல், ரூ.736,000,000.00 பெறுமதியான மூலதன ஒதுக்கீட்டில், ரூ.191,259,466.00 செலவிடப்பட்டுள்ளதுடன், இது மொத்தத்தில் 25.99% ஆகும். 2025 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட நிகர மதுவரி வருமானம் ரூ.231,541,851,691.49 ஆகும், இது 2025 ஆம் ஆண்டின் மதிப்பிடப்பட்ட மதுவரி வருமானத்தின்படி 102.45% அதிகரிப்பாகும். 2025 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட புகையிலை வரி வருவாய் ரூ. 2025 ஆம் ஆண்டின் மதிப்பிடப்பட்ட புகையிலை வரி வருமானம் ரூ.1,545,090,768.96 என்பதுடன், இது 110.36% சதவீத அதிகரிப்பாகும். 2025 ஆம் ஆண்டில், ரூ.44,999,236.00 பெறுமதியான கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. 2025 ஆம் ஆண்டில், ரூ.41,225,686.39 பெறுமதியான கடன்கள் மீள அறவிடப்பட்டுள்ளன. 2025 ஆம் ஆண்டில் சேமிப்புக் கணக்கில் மீளச் செலுத்தப்பட்ட தொகை ரூ.278,335,783.00 ஆகும். 2025 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை, வெளியீடு, முன்பண “பீ” கணக்கின் கணக்கிணக்கக் கூற்று, சேமிப்புக் கணக்கு மற்றும் மதுவரி வெகுமதி நிதிக் கணக்கு ஆகியவை உரிய திகதியில் அரச கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. 2025 ஆம் ஆண்டில் கணக்குப் பிரிவிடம் 29 கணக்காய்வு ஐயவினாக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் இந்த ஆண்டில் பதிலளிக்கப்பட்டுள்ளது.

## 2:1:4 தகவல் தொழில்நுட்பம்

- இலங்கை சுங்கத் திணைக்களத்தின் ASYCUDA முறை ஊடாக மதுவரி சார்ந்த ஏற்றுமதி, இறக்குமதிப் பணிகளிற்கு தேவையான பரிந்துரைகள் மற்றும் அங்கீகாரங்களை இணைய (Online) முறைமையூடாக வழங்குதல் மற்றும் உரிய அலுவலர்களுக்கு இயைபுடைய பயிற்சி, தகவல் தொழில்நுட்ப வசதிகளை வழங்குதல்.

- இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு சபையின் STRATLINK இடைவெட்டு முகம் (Interface) ஊடாக தரவுகளை உள்ளடக்குதல்.

- RASED வேலைத்திட்டத்திற்கான தேவைகள் பற்றிய அட்டவணை (SOR) தயாரிக்கப்பட்டு முடிவடைந்ததுடன், RASED வேலைத்திட்டத்திற்காக முகவர் நிறுவனம் ஒன்று விலைமனு கோரலின் ஊடாக தெரிவு செய்யப்பட்டது. அந்த முகவரகமான ஜனவரியில் Millennium IT நிறுவனத்துடன் மதுவரித் திணைக்களம் RASED வேலைத்திட்டத்திற்காக உடன்படிக்கையைச் செய்துகொண்டது.

## 2:1:5 சட்ட வலுப்படுத்தல் (குற்றம்)

- 2025 இல் நாடு முழுவதும் உள்ள மதுவரி உரிம நிலையங்களில் மேற்கொள்ளப்படும் முழுமையான மேற்பார்வை மற்றும் நிர்வாகத்தின் ஊடாக உரிம நிபந்தனைகளை மீறுதல் தொடர்பான 5,176 தொழில் நுட்பக் குற்ற அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதன் மூலம் அரசிற்கு கூட்டுத்தண்டப்பணம் ரூ.121,401,899.91 இனைப் பெற்றுக் கொள்ள முடிந்தமை.


- 2025.06.02 முதல் 2025.06.08 வரையான வரி வாரம் மற்றும் 2025.10.23 முதல் வரையான விசேட கண்டுபிடிப்பு வேலைத்திட்டம் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. இந்த வேலைத்திட்டத்தின் மூலம் திணைக்களத்தின் வருமான இலக்குகளை வெற்றிகரமாக அடைதல், உள்நாட்டு மற்றும் வணிக மட்டங்களில் நாட்டில் நிலவும் சட்டவிரோத மதுபானங்களின் உற்பத்தி மற்றும் பயன்பாட்டை அடக்குதல் மற்றும் தொடர்புடைய வருமான இலக்கை அடைதல், பொதுமக்களால் கட்டுப்பாடற்ற மதுபான பயன்பாட்டைக் குறைக்க நடவடிக்கை எடுத்தல் மற்றும் நாடு முழுவதும் நிலவும் சட்டவிரோத போதைப்பொருட்களை ஒடுக்குவதன் மூலம் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்தற்கு பங்களித்தல் என்பன இப்பணிகளிலிருந்து எதிர்பார்க்கப்படும் நோக்கங்களாகும்.

- 34,995 சட்ட விரோத மதுபானங்கள் மற்றும் போதைப்பொருள் சுற்றிவளைப்புகளின் மீது வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு அதன் ஊடாக ரூபா 213,043,679.00 ஐ தண்டப்பணமாக பெற முடிந்தமை.

- பொது மக்களுடன் நெருக்கமாக பணியாற்றும் பொருட்டு பொது சன முறைப்பாடுகளிற்கு முக்கியத்துவம் வழங்கலின் பொருட்டு விசேட தொலைபேசி இல. 1913 இனை 24 மணி நேரமும் செயற்படுத்துவதன் ஊடாக 3065 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதுடன், அம்முறைப்பாடுகள் மதுவரிப் பிராந்திய அலுவலகங்களிற்கு உடனடியாக அனுப்பப்பட்டன.

- சுற்றிவளைப்பு மேற்கொள்ளும் அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 9 மி.மி. வகையில் 175 பிஸ்ரல்களைக் கொள்வனவு செய்வதற்கு திணைக்களத்தால் முடிந்ததுடன், அதன் ஊடாக சுற்றிவளைப்பு அலுவலர்களின் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் உயர் தரத்திலான சுற்றிவளைப்பையும் மேற்கொள்ள சந்தர்ப்பமளிக்கும்.

## 2:1:5 ஆதரவளிப்பு




- 2025 இற்குரிய இலக்கிற்குரிய வருமானம் சேகரித்தல் மற்றும் கண்டுபிடிப்பு ,லக்கினை அடைவதற்காக நேரடியாக வழங்கப்பட்ட 143 வாகனங்களைக் கொண்ட திணைக்களம்சார் வாகனக் குழுமம், 2025 ஆம் ஆண்டில் ஆதவளிப்புப் பிரிவால் முறையாகவும் குறித்த நேரத்திலும் பராமரிக்கப்பட்டது. மேலும், திணைக்களத் தலைமை அலுவலகம் உட்பட 107 பிராந்திய அலுவலகங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணிகள் முறையாக மேற்கொள்ளப்பட்டதோடு, திணைக்கள ஊழியர்களுக்கு ஒரு நல்ல அலுவலகச் சூழலை வழங்கும் வகையில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய கட்டிடங்களும் பராமரிக்கப்பட்டன. மேலும், ஆதரவளிப்புப் பிரிவானது, ஆண்டு முழுவதும் உரிமதாரர்களின் தேவைகளுக்கும் திணைக்களம்சார் தேவைகளுக்கும் கோரப்பட்ட அனைத்து ஆவணங்களையும் நிறுவனப் புத்தகங்களையும் வழங்கியது.

- 2025.12.31 ஆம் திகதியளவில் மதுவரித் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளின் எண்ணிக்கை 47 ஆக ,ருந்ததுடன் 35 காணிகளின் உரித்து கையகப்படுத்தப்பட்டிருந்ததுடன், 12 காணிகளின் உரித்து கையகப்படுத்துவதற்கான செயன்முறை 2025 இல் தொடர்ச்சியாக நடைபெற்றது.

- திணைக்களத்துக்குச் சொந்தமான வாகனங்களில் சுமார் 70% மானவை 20 ஆண்டுகளுக்கும் மேலானவை என்பதுடன், அந்த வாகனங்களை பழுதுபார்ப்பது செலவு கூட என்பதால், முன்மொழியப்பட்ட புதிய வாகனங்கள் கொள்வனவில் புதிய வாகனங்களை கொள்வனவு செய்வதற்காக நிதி அமைச்சிடமும் ஜனாதிபதி செயலகத்திடமும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளன.

- இலங்கை மதுவரித் திணைக்களத்தின் 25 மதுவரி நிலையங்கள் குத்தகை அடிப்படையில் இயங்குதல் 2025 ஆம் ஆண்டிலும் நடைபெற்றன.

## 2:1:6 கற்கை மற்றும் ஆராய்ச்சி

- இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் மதுபானங்களின் தரத்தையும், வெளிநாட்டிலிருந்து ,றக்குமதி செய்யப்படும் மதுபானங்களின் தரத்தையும் பரிசோதிக்க, இலங்கை மதுவரித் திணைக்களம் 2021 ஆம் ஆண்டில் ஒரு மதுவரி மத்திய ஆய்வுகூடத்தை நிறுவ ஆரம்பித்தது. அதன்படி, 2025 ஆம் ஆண்டின் ,றுதியில் முழு வசதிகளுடன் கூடிய மதுவரி மத்திய ஆய்வுகூடம் திறக்கப்பட்டு, ஆய்வுகூடப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளதுடன், 2026 ஆம் ஆண்டில் ஆய்வுகூடச் சேவைக்காகப் பணியாளர்களை நியமிக்கவும், பரிசோதனைப் பணிகளை மேம்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, சீதுவ DCSL வடிசாலை வளாகத்திலும், யாழ்ப்பாணம் கோப்பாய் போத்தலில் அடைத்த நீர் உற்பத்தி ஆலை வளாகத்திலும் இரண்டு சிறிய அளவிலான ஆய்வுகூடங்கள் ஏற்கனவே செயற்பாட்டில் உள்ளன.



யாழ்ப்பாணம் ஆய்வுகூடம்




பூகொட ஆய்வுகூடம்

- இலங்கையில் கள்ளிற்கு தரநிலைகளை உருவாக்க

- வேண்டியதன் அவசியத்தின் காரணமாக, இலங்கை மதுவரித் திணைக்களத்தின் கல்வி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவானது, இலங்கை தரநிலைகள் பணியகம், அரசாங்கப் பகுப்பாய்வாளர் அலுவலகம் மற்றும் இலங்கை கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து, தென்னம் கள்ளிற்கான தரநிலைகளை உருவாக்கும் பணியை தற்போது நிறைவு செய்துள்ளது.

- மேலும், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் வெளிநாட்டு மதுபானம், சாராயம் மற்றும் பியர் ஆகியவற்றிற்கான தரநிலைகள் இறுதி செய்யப்பட்டுள்ளதுடன், அந்த தரநிலைகள் மற்றும் மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் சட்ட விதிகள் தொடர்பான ஏதேனும் சிக்கல்களைத் தீர்க்க ஒரு நிபுணர் குழு நியமிக்கப்பட்டுள்ளது. மேலும், பாராளுமன்றக் கணக்குகள் பற்றிய குழு வலியுறுத்தியுள்ளபடி, நுகர்வோரின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பைப் பாதுகாக்கும் வகையில், மதுபானங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மதுபானத்திற்கான தரநிலைகளை வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடுவது காலத்தின் கட்டாயமாகும். 2026 ஆம் ஆண்டில் சக்கே, சைடர் மற்றும் வைனுக்கான தரநிலைகளை நிர்ணயிப்பதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

- மேலும், சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவின் பேரில், பிரதி மதுவரி ஆணையாளரின் (கற்கை, ஆராய்ச்சி) கீழ் ஒரு இடர் முகாமைப் பிரிவு நிறுவப்பட்டுள்ளதுடன், 2024 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட அலுவலர் குழு நியமிக்கப்பட்டு, தற்போதுள்ள அபாயங்கள் கண்டறியப்பட்டு தொடர்புடைய விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

- மதுவரித் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைத் தயாரித்து, அதனை உரிய திகதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல், மதுவரித் திணைக்களத்தின் அனைத்து பிரிவுகளையும் உள்ளடக்கிய வருடாந்த மற்றும் காலாண்டு செயல் திட்டத்தைத் தயாரித்தல் என்பனவும் கல்வி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவின் பொறுப்பாகும்.

## 2:1:7 வழங்கல் தொடர் ஒழுங்கமைப்பு

- மதுவரி அறிவித்தல் 04/2019 இன் படி, இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானங்களுக்கான பாதுகாப்பு ஸ்டிக்கர்கள் (Paper Base) ஒட்டுவது 2019.07.15 ஆம் திகதி தொடங்கியதுடன் அந்த பாதுகாப்பு ஸ்டிக்கர்கள் ஒட்டுதல் தொடர்பான சகல ஒழுங்குவிதிகள் மற்றும் விடயங்கள் ,ந்த அறிவித்தலின் ஊடாக பிரசுரிக்கப்படுகிறது.

- 2147/75, 2164/72, 2178/4, 2200/34 ஆகிய வர்த்தமானிகளில் வெளியிடப்பட்ட மதுவரி அறிவித்தல் இல. 06/2019, 01/2020, 03/2020 மற்றும் 01/2021 ஆகியவற்றின் ஊடாக, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மதுபானப் போத்தல்களின் மீதான பாதுகாப்பு முத்திரை பொறிக்கும் திகதி காலத்திற்குக் காலம் திருத்தஞ் செய்யப்படுவதுடன், மதுவரி அறிவித்தல் இல. 04/2019 ரத்துச் செய்யப்பட்டு, மதுவரி அறிவித்தல் இல. 07/2021 வெளியிடப்பட்டுள்ளது. மதுவரி அறிவித்தல்கள் 08/2021, 09/2021 ஆகியவற்றின் ஊடாக உள்நாட்டில் தயாரிக்கப்படும் சகல மதுபானப் போத்தல்களின் மீதான பாதுகாப்பு முத்திரை பொறிக்கும் திகதி காலத்திற்குக் காலம் திருத்தஞ் செய்யப்படுவதுடன் அந்த அறிவித்தல்கள் ரத்துச் செய்யப்பட்டு மதுபானப் போத்தல்களின் மீதான பாதுகாப்பு முத்திரை மற்றும் டிஜிட்டல் அடையாளம் இடுதல் ஆரம்பிக்கும் திகதியாக 2022 ஜனவரி 03 ஆம் திகதி அறிவிக்கப்பட்டு மதுவரி அறிவித்தல் 10/2021 பிரசுரிக்கப்பட்டது. தற்போது, மதுவரி அறிவித்தல் 07/2021 இன் விதிகளின்படி, உள்நாட்டில் தயாரிக்கப்படும் மதுபானங்கள் மற்றும் இறக்குமதி செய்யப்படும் வெளிநாட்டு மதுபானங்கள் ஆகியவற்றிற்கு பாதுகாப்பு முத்திரைகள் மற்றும் டிஜிட்டல் அடையாளங்கள் இடப்பட்டு வருகின்றன. இது சந்தையில் போலி முத்திரைகளின் புழக்கத்தைக் குறைத்து, வரி வருமானத்தைப் பாதுகாக்கவும் வழிவகுத்துள்ளது.

- வழங்கல் தொடர் ஒழுங்குபடுத்தல் பிரிவினால் 2025 ஆம் ஆண்டில் மதுபான உற்பத்திச்சாலைகளுக்கு வழங்கப்பட்ட காகித அடிப்படை ஸ்டிக்கர் (உள்நாட்டு மதுபானங்களிற்கு) மற்றும் டிஜிட்டல் குறியீடு (உள்நாட்டு மதுபானங்களிற்கு) மற்றும் காகித அடிப்படை ஸ்டிக்கர் (வெளிநாட்டு மதுபானங்களிற்கு) என்றவாறு பாதுகாப்பு அடையாளங்கள் வெளியிடப்பட்டுள்ளது.

- 2024 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் புதிய பாதுகாப்பு அம்சங்களைக் (New Security Features) கொண்ட ஒரு புதிய பாதுகாப்பு ஸ்டிக்கர் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், பாதுகாப்பு முத்திரையைச் சரிபார்ப்பதற்கான புதிய

கைத்தொலைபேசி மென்பொருள் ஒன்று மெட்ராஸ் செக்யூரிட்டி பிரிண்டர்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தால் ஒரு முன்னோடி வேலைத்திட்டமாக முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது.

### 2:1:8 சட்டம்

- மதுவரி ஆணையாளர் நாயகத்தின் நேரடி மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் அவரால் குறிப்பிடப்படும் சட்டச் சிக்கல்கள் குறித்துப் பரிந்துரைகளை வழங்குதல், தொடர்புடைய ஆவணங்களைத் தயாரித்தல், விசேடமாக சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் அரச நிதிக் கொள்கைகள் திணைக்களம் அடங்கலான பிற வெளியக அரச நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்தல் ஆகியவை இந்தப் பிரிவின் முதன்மை செயற்பாடுகளாகும்.

- 2025 ஆம் ஆண்டில், பிரதி மதுவரி ஆணையாளரின் (சட்டம்) இன் கீழ், செயல்படும் சட்டப் பிரிவு, அதன் பணிகளை சட்ட அலுவலர் ஒருவர், சீருடை மற்றும் சீருடை அல்லாத பணியாளர்களை உள்ளடக்கி மேற்கொள்கிறது.

- சட்டப் பிரிவு, விசேடமாக மதுவரித் திணைக்களத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்படும் அடிப்படை உரிமைகள் மற்றும் ரிட் மனுக்களுக்கு சட்டமா அதிபர் திணைக்களத்துடன் நல்ல ஒருங்கிணைப்பைப் பேணுதல், அத்தகைய மனுக்களுக்கான தகவல்தொடர்புகள் மற்றும் ஆவணங்களைத் தயாரித்து சமர்ப்பித்தல், நிர்வாகம் மற்றும் உரிமம் வழங்குதல் தொடர்பாக எழும் சட்ட சிக்கல்கள் குறித்த ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் அறிவித்தல்கள் உள்ளிட்ட சட்ட வரைவுகளை மேற்கொள்வதற்கு பங்களிப்பதன் மூலம் மதுவரித் திணைக்களத்தின் ஒட்டுமொத்த செயலாற்றுகையை அடைவதற்கு சட்டப்பூர்வ அதிகாரமளிப்பதில் அதிகபட்ச பங்களிப்பை வழங்குகிறது.

### 2:1:9 சமூகப் பாதுகாப்பு

மக்களின் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, அரச நிறுவனங்கள், பாடசாலைகள் போன்றவற்றில் போதைப்பொருள் தடுப்புத் திட்டங்களை ,ந்தப் பிரிவு ஏற்பாடு செய்கிறது. 2025 ,ல், மதுபான நுகர்வின் பின் வீசப்படும் போத்தல்கள் போன்றவற்றால் ஏற்படும் மாசுபாட்டைத் தடுக்க மதுபான விற்பனை நிலையங்களுக்கு அருகில் கூடைகள் நிறுவப்பட்டதுடன், நாடு முழுவதும் 209 போதைப்பொருள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.



பாடசாலைகளில் போதைப்பொருள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்



பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களுக்கு போதைப்பொருள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்

### 2:1:10 உள்ளக கணக்காய்வு

- 2025 செயல் திட்டத்தின் பிரகாரம் (உள்ளக கணக்காய்வுத் திட்டம்) எதிர்பார்த்த இலக்கில் 134% முன்னேற்றம் பெறப்பட்டுள்ளது. இங்கு, ஏற்றுமதி அடிப்படையிலான உற்பத்தி வருமானத்திலிருந்து மீளச் செலுத்தப்படும் வரி விலக்கு தொடர்பான கணக்காய்வுகள் மற்றும் மதுவரி ஆணையாளர் நாயகத்தால் ஒதுக்கப்பட்ட விசேடித்த விசாரணைகள் முடிக்கப்பட்டு, தொடர்புடைய அனைத்து அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### 2:1:11 புள்ளிவிபரம்

மதுவரித் திணைக்களம் மூலம் ஒழுங்குபடுத்தப்படும் மதுபானக் கைத்தொழில் மற்றும் பீடிக் கைத்தொழில் பற்றிய புள்ளிவிபரம் தயாரித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் என்பன இப்பிரிவின் முதன்மைப் பணிகளாகும்.

- நிதி அமைச்சு, மத்திய வங்கி, பாராளுமன்றம் போன்ற அரச நிறுவனங்களிற்கு அனுப்ப வேண்டிய புள்ளிவிபர அறிக்கைகள் தயாரித்தல், வருடாந்த செயலாற்றுகை அறிக்கை தயாரித்தல் மற்றும் வருடாந்த மற்றும் காலாண்டு ரீதியான செயற் திட்ட தயாரிப்பிற்கான பொறுப்பு, அரச நிறுவனங்கள்

மற்றும் அரசசார்பு நிறுவனங்களுக்குத் தேவையான தரவுகளை வெளியிடுவது போன்ற விடயங்கள் இப்பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படுகிறது.

**சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) பரிந்துரைகளை செயற்படுத்துதல்.**

- சர்வதேச நாணய நிதியம் (IMF) இலங்கையின் பொருளாதார நிலையை உயர்த்தும் நோக்கில் நிறுவனங்களின் வருமானத்தினை அதிகரிப்பதற்கு முன்மொழியப்பட்ட பரிந்துரைகள் தொடர்பில் மதுவரித் திணைக்களத்துடன் தொடர்புடைய பின்வரும் குழுக்கள் தாபிக்கப்பட்டன.

**1. மதுவரி வருமானத்தை முகாமையிடல் மற்றும் மேம்படுத்துதல் பொருட்டு மதுவரித் திணைக்களத்தினால் இடர் முகாமைப் பிரிவொன்று தாபிக்கப்படல்.**

- இந்த பிரிவின் ஊடாக மதுபான உற்பத்திச்சாலைகள், வடிசாலைகள், கள் உற்பத்திச்சாலைகள் மற்றும் மதுபான விற்பனை உரிமதாரர்களின் விற்பனைசாலைகளை விசேட பரிசோதனைக்கு உட்படுத்துவதன் மூலம் அவற்றில் ஏற்படும் குறைபாடுகளைக் கண்டறிந்து அவற்றிற்கு சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

**2. இலங்கை மதுவரித் திணைக்களத்தில் நிதி நுண்ணறிவுப் பிரிவொன்றை (FIU) தாபித்தல்.**

- இலங்கை மத்திய வங்கியின் நிதி நுண்ணறிவுப் பிரிவு மதுவரித் திணைக்களத்தின் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று 2025.11.20 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. அந்த உடன்படிக்கைக்கு ஏற்ப, பொருத்தமான பணிகளை செயற்படுத்துவதற்கு அர்ப்பணிப்பும் தேர்ச்சியும் மிக்க தொழில் வல்லுநர்கள் / நிபுணர்களைக் கொண்ட பிரிவொன்று தாபிக்கப்பட்டது.

- பண மோசடி தடுப்பு மற்றும் பயங்கரவாத செயற்பாட்டுக்கு நிதியுதவி தடை செய்யப்படுதல் என்பவற்றின் கீழ் கொள்கைகளை செயற்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டது.

- இந்த பிரிவின் ஊடாக பண மோசடி மற்றும் பயங்கரவாத நிதியமைப்பு தொடர்புடைய நுண்ணறிவுத் தகவல் மற்றும் அத்தகவல்களுக்கு உரிய தரப்பினருடன் பரிமாறிக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

- மதுவரித் திணைக்களத்தால் செய்யப்படும் சுற்றிவளைப்புகள் பற்றிய வகைப்படுத்தப்பட்ட தரவுகளை பயன்மிக்க தரப்பினருக்குப் பகிர்ந்தளித்தல் மற்றும் பணச் சலவை, பயங்கரவாத நிதியுதவி ஆகியவற்றின் அபாயங்களை மதிப்பிடுதல் மற்றும் அது தொடர்பாக பயிற்சி வழங்கல் என்பன இப்பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படுகிறது.

**3. உள்ளக நிர்வாகப் பிரிவு (IAU) / முறைப்பாட்டு முகாமை விசாரணைப் பிரிவு தாபித்தல்**

பல்வேறு அலுவலர்களின் ஒழுங்கீனங்களுக்கு எதிரான முறைப்பாடுகளை விசாரித்தல் இப்பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படுகிறது. பல்வேறு மோசடி, ஊழல், ஒழுங்கீனம் போன்றவற்றைப் பற்றிய விசாரணையின் மூலம் மதுவரி வருமானத்தை உயர்த்துதல் இப்பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படுகிறது.

- சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை தொடர்பான 23/340 ஆம் இலக்க அறிக்கையின் பரிந்துரையின்படி உள்ளகக் கட்டுப்பாட்டுப் பிரிவொன்று 2024.07.26 ஆம் திகதி நிறுவப்பட்டதுடன் 2025.02.18 ஆம் திகதிய ஜனாதிபதி செயலகத்தின் அரச நிறுவனங்களில் உள்ளக நடவடிக்கைகள் பிரிவைத் தாபித்தல் எனும் தலைப்பில் சமர்ப்பிக்கப்பட்ட சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி 2025.03.04 ஆம் திகதி மீளவும் தலைவர், திறன் அலுவலர் மற்றும் உறுப்பினர்கள் பெயர் குறிப்பிடப்பட்டது.

- பின்னர் ஜனாதிபதி செயலகத்தின் PS/SB/CURCULAR ஆம் இலக்க 2/2025 ஆம் சுற்றறிக்கையின் படி ஒவ்வொரு அரசாங்க நிறுவனமும் இந்த உள்ளக கட்டுப்பாட்டுப் பிரிவின் தாபனத்திற்கு இணைவாக மிகவும் வலுவாக நிறுவப்பட்டுள்ளது.

- 2025 ஆம் ஆண்டில் இப்பிரிவிற்கு பல்வேறு விடயங்கள் தொடர்பாக 32 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதுடன், அவை யாவும் முறைப்பாட்டு விசாரணைகள் மற்றும் பொருத்தமான நடவடிக்கை பொருட்டு உரிய பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

- மேலும் 2025 இல் இலங்கை மதுவரித் திணைக்களத்தில் சேவையில் ஈடுபடும் அலுவலர்களுக்கு 06 பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

- இலங்கை மதுவரித் திணைக்களத்தில் இருந்த நடத்தைக் கோவை நவீனமயப்படுத்தி தயாரிக்கப்பட்ட ஏடு மூன்று மொழிகளிலும் வெளியிடப்பட்டதுடன், அதனை திணைக்களத்தின் அனைத்து அலுவலர்களுக்கும் வழங்கி உடன்பாடு எட்டப்பட்டது. இது தொடர்பில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் நடத்தப்பட்டு

## 2:2 எதிர்கால இலக்குகள் மற்றும் சவால்கள்

### <u>2:2:1 எதிர்கால இலக்குகள்</u>

2026 இன் வருமான இலக்காக ரூ.245 பில்லியனை அண்மித்தமை

- 2026 இற்காக இலக்கிற்குரிய வரி வருமானம் ரூபா 245 பில்லியன் என வழங்கப்பட்டது. அந்த வருமான இலக்கை 2025 வருடத்திற்கான வருமான இலக்குடன்

ஒப்பிடுகையில் 7.7% உயர் வருமான இலக்கினைக் கொண்டுள்ளது. 2026 வருடத்தில் மதுபானத்திற்கான வரி வருமானமாக ரூ.243 பில்லியனும் பீடி உற்பத்தி மீது விதிக்கப்பட்ட புதிய வரிக் கொள்கையின் படி, பீடிக்கு ரூ.2 பில்லியன் வரி வருமானமாகவும் வருமான இலக்குகள் வழங்கப்பட்டன.

- புகையிலை வரிச் சட்டத்தை திருத்தஞ் செய்தல் பொருட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதன்படி, புலமைச் சொத்துரிமைச் சட்டத்தின் கீழ் வர்த்தக முத்திரைகளின் பதிவை கட்டாயமாக்குவதற்கும், புகையிலை வரிச் சட்டத்தின் கீழ், பீடி சுற்றும் இலைகளை அதாவது தெந்து இலைகளை, ஒரு மூலப்பொருளாகச் சேர்ப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க, சட்டவிரோத தெந்து இலைகளின் இறக்குமதியையும், பீடி உற்பத்தி வரியைச் செலுத்தாமல் போலி உற்பத்திகள் சந்தையில் நுழைவதையும் தடுப்பதே இதன் நோக்கமாகும். மேலும், புகையிலை உற்பத்திகளின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி தொடர்பான வருடாந்த கட்டணங்களின் திருத்தம் குறித்த அறிவித்தல்கள் மற்றும் சுற்றறிக்கைகள் மூலம் தேவையான ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதும் இதன் நோக்கமாகும். புகையிலை தொடர்பாக மேற்கொள்ளப்படும் சுற்றிவளைப்புகளில் ஈடுபடும் அலுவலர்களுக்கு வெகுமதித்தொகை வழங்குவதன் மூலம் மேற்கொள்ளப்படும் கண்டுபிடிப்புகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதும் இதன் நோக்கமாகும்.

- இடர் முகாமைப் பிரிவின் ஊடாக மதுவரி வருமான வளர்ச்சிக்கு தேவையான செயற்பாடுகளை இனங்காணுதல் மற்றும் அதனால் ஏற்படும் இடர்பாடுகளைக் குறைக்கத் தேவையான நடவடிக்கை எடுத்தல்.

**நுகர்வோருக்கு உடலுக்கு தீங்கு விளைவிக்காத வகையில் மதுபானம் வழங்குவதற்கு ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு தரமான உயர் மதுபானத்தை வழங்கல்**

- கள்ளிற்குரிய தரநிலைகளை இலங்கை தரக்கட்டளை நிறுவனத்தினால் அறிமுகப்படுத்திய பின் அத்தரநிலைகள் உத்தியோக பூர்வமாக வெளியிடப்படும். இது சந்தையில் செயற்கைக் கள்ளின் வரவைத் தடுப்பதுடன், உயர் தரம் வாய்ந்த இயற்கைக் கள்ளின் கிடைக்கும் தன்மையை உறுதிப்படுத்தி நுகர்வோர் தேவையை மேம்படுத்துகிறது.

- வைன் மற்றும் சக்கே இற்கு தரநிலைகளை தயாரிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல்.

- மதுசாரத்திலிருந்து மதுபான உற்பத்தி செய்வதற்கான தரநிலைகளை அரச வர்த்தமானியின் ஊடாக வெளியிடுதல்.

**முறையான உபாயத்திறன்களைப் பின்பற்றி பாதுகாப்பு ஸ்டிக்கர்களை இற்றைப்படுத்துவதன் ஊடாக வரியற்ற மதுபான விநியோகத்தைத் தடுக்க நடவடிக்கை எடுத்தல்.**

- உள்நாட்டு உற்பத்தி செய்யப்பட்ட மதுபானம் மற்றும் வெளிநாட்டு இறக்குமதி மதுபானப் போத்தல்கள் மீது பாதுகாப்பு முத்திரை (ஸ்டிக்கர்) இடுதலை உறுதிப்படுத்தல் பற்றிய சுற்றிவளைப்புகளை விரிவுபடுத்தல்.

- மதுபான போத்தல் மீது ஒட்டப்படும் பாதுகாப்பு முத்திரைகளை மேம்படுத்தி, பாதுகாப்பு அடையாளங்களின் வர்ணங்கள் மற்றும் வடிவமைப்புகளை மாற்றி ஏலவே மதுபான உற்பத்திச்சாலைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. பாதுகாப்பு ஸ்டிக்கரை உறுதிப்படுத்துவதற்காக MSP நிறுவனத்தால் புதிய மென்பொருள் ஒன்று எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

- பாதுகாப்பு முத்திரையைச் சரிபார்ப்பதற்காக மெட்ராஸ் செக்யூரிட்டி பிரிண்டர்ஸ் (பிரைவேட்) லிமிடெட் அறிமுகப்படுத்திய புதிய மொபைல் மென்பொருளானது, CERT அங்கீகாரத்திற்காக 24.10.2025 அன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கணினி அவசரகால ஆயத்தக் குழுவிடமிருந்து (CERT) அனுமதி கிடைத்த பின்னர், இந்த மொபைல் மென்பொருள் இயன்றளவு விரைவில் பொதுமக்களுக்கு வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- பாதுகாப்பு அடையாளம் தொடர்பான முறைப்பாடுகள் மற்றும் தொழில்நுட்ப சிக்கல்கள் தொடர்பாக வினைத்திறனுடன் செயற்பட போதிய அலுவலர்களைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல்.

**அலுவலர்களுக்கான பயிற்சித் தேவைகளை வழங்குதல்**

**தரநிலை மற்றும் அளவின் நியதிகளில் உயர் கண்டுபிடிப்பு இலக்குகளை அடைவதன் ஊடாக மதுவரி வருமானத்தை உயர்த்துதல்**

- சட்டவிரோத மதுபான பரவலைக் கட்டுப்படுத்துவதன் மூலம் மதுபான உற்பத்தியை அதிகரிக்க, 2026 ஆம் ஆண்டில் நாடு முழுவதும் 38,000 குற்ற அறிக்கைகளையும் 4,000 தொழில்நுட்பக் குற்ற அறிக்கைகளையும் சேகரிக்க மதுவரி அலுவலர்களுக்கு இலக்குகள் வழங்கப்பட்டுள்ளதுடன் மாதாந்த அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகிறது.

- கடல் மார்க்கமாக இந்நாட்டுக்கு சட்ட விரோதமாக இறக்குமதி செய்யபப்படும் போதைப்பொருட்கள் மற்றும் புகையிலை தொடர்பான உற்பத்திகளை வெற்றிகரமாக கட்டுப்படுத்துதல்

- நாடு முழுவதும் போதைப்பொருள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் போதைப்பொருள் இல்லாத இலங்கையை உருவாக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்

- போதைப்பொருள் தொடர்பான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் சமூக பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

- புகையிலை வரிச் சட்டத்தின் கீழான பீடி உற்பத்திக்கு வரி வருமானத்தை உயர்த்தும் பொருட்டு சட்ட விரோத உற்பத்திகளை கட்டுப்படுத்துதல்

**நாடு முழுவதும் போதைப்பொருள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் போதைப்பொருள் இல்லாத இலங்கையை உருவாக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.**

**நிலுவைத் தொகையை அறவிடும் பொருட்டு சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் நிதி அமைச்சின் இணக்கப்பாட்டின்படி நடவடிக்கை எடுத்தல்.**

- வரி நிலுவை செலுத்த வேண்டிய உரிமதாரர்களின் உரிமங்கள் மற்றும் உற்பத்தி நடவடிக்கைகளை இடைநிறுத்துவதற்கும், அதற்கான நீதிமன்ற நடவடிக்கைகளை எடுப்பதற்கும் தொடர்புடைய சட்டங்களைத் திருத்தி சட்டப்பூர்வமாக்குதல்.

- கழிவுகளுக்கு விதிக்கப்படும் வரிகளை முகாமையிடுதற்காக கழிவுகள் தொடர்பான நடைமுறை சதவீதங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் மதுவரி அறிவித்தல்களை வெளியிடுதல்.

- பணிகளை வினைத்திறனாகச் செய்யும் பொருட்டு புதிய வாகனங்களை கொள்வனவு செய்தல் மற்றும் நிரந்தர கட்டிடங்களை நிர்மாணித்தல்

- பழைய வாகனங்களை பழுதுபார்ப்பதற்கு செலவு மிகுந்ததாக இருப்பதால் புதிய வாகனங்களை கொள்வனவு செய்தல்.

- ,லங்கை மதுவரித் திணைக்களத்தின் 25 பிராந்திய அலுவலகங்கள் வாடகை அடிப்படையில் இயங்கி வருவதுடன் இந்த நிலையங்களுக்கு அரசாங்க கட்டிடங்களைத் தேடுதல் அல்லது புதிய கட்டிடங்கள் நிர்மாணித்தல் இலக்காகக் கொள்ளப்பட்டுள்ளது.

**சுற்றுலா சபையால் அங்கீகரிக்கப்பட்ட வெ.ம 7/8, வெ.ம. 11, 22 பீ, மற்றும் புட்டிக் வில்லா உரிமங்களை வழங்குவதன் மூலம் சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரித்தல்.**

**உள்ளக நிர்வாகப் பிரிவு (IAU) இன் ஊடாக அலுவலர்கள் தொடர்பில் செய்யப்பட்ட முறைப்பாடுகள் மீது நடவடிக்கை எடுத்தல்.**

**RASED அமைப்பின் அனைத்துத் தேவைகளையும் இனங்கண்டு, அந்த மென்பொருள் முறையை விருத்தி செய்வதற்கு சேவை வழங்குனர் ஒருவரைத் தேசிய திறந்த பெறுகைச் செயல்முறை மூலம் தெரிவு செய்வதுடன் மென்பொருள் விருத்தி நடவடிக்கையை மொடியூல் முறையில் மேற்கொள்ளல் மற்றும் திணைக்கள தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.**

### 2:2:2 சவால்கள்

சட்டவிரோத மதுபானங்கள் மற்றும் தீர்வை வரி செலுத்தாது இறக்குமதி செய்யப்பட்ட மதுபானங்களினை நாட்டில் பயன்பாட்டுக்கு விடுதல்.

- இந்த வேலைத்திட்ட ஆரம்பத்தில் பல்வேறு சிக்கல்கள் இருந்தபோதிலும், அவை குறைக்கப்பட்டு, தற்போது அனைத்து மதுபான போத்தல்களிலும் ஸ்டிக்கர் மற்றும் டிஜிட்டல் அடையாளங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இருப்பினும், டிஜிட்டல் அடையாளங்கள் அச்சிடுவதில் உள்ள பிழைகள் திணைக்களம் எதிர்கொள்ளும் முக்கிய சவாலாகும். இந்த சவால்களை வெற்றி கொள்ளும் பொருட்டு, டிஜிட்டல் குறியீடு அச்சிடுதலின் துல்லியத்தை அதிகரிக்க, இயந்திரங்களை மேம்படுத்தவும் புதிய இயந்திரங்களை நிறுவவும் மெட்ராஸ் செக்யூரிட்டி பிரிண்டர்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், டிஜிட்டல் குறியீடுகள் அச்சிடப்படாத மதுபான போத்தல்கள் சந்தைக்கு அனுப்பப்படுவதைத் தடுப்பதற்காக, ஒரு நிராகரிப்பு உற்பத்தி வரிசையை (Rejection line) நிறுவ தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. போலி முத்திரைகள் புழக்கத்தில் வருவதைத் தடுப்பதற்காக, புதிய பாதுகாப்பு முத்திரைகளைக் கொண்ட பாதுகாப்புச் அடையாளங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இது தொடர்பாக, எம்.எஸ்.பி (MSP) நிறுவனம் 200 புதிய, இற்றைப்படுத்தப்பட்ட பாதுகாப்பு முத்திரை ஆய்வு உபகரணங்களை இறக்குமதி செய்துள்ளது.

- பாதுகாப்பு முத்திரை முகாமை முறைக்கு இணைவாக அலுவலர்களின் பணிகளை இலகுபடுத்தும் பொருட்டு தேவையான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டு அவர்களின் அறிவு மேம்படுத்தப்பட்டுள்ளது.

- கொழும்பு துறைமுக நகரத்திற்கு வழங்கப்படும் தீர்வை வரியற்ற மதுபான போத்தல்களுக்கு தற்போது பயன்படுத்தப்படும் பாதுகாப்பு ஸ்டிக்கர், தீர்வை வரியற்ற புறப்படுகை (Duty Free Depature) பாதுகாப்பு ஸ்டிக்கர் ஆகும். இருப்பினும், வெளிநாட்டிலிருந்து நாட்டிற்கு வரும் ஒருவர் கொழும்பு துறைமுக நகரத்திலிருந்து 03 நாட்களுக்குள் தீர்வை வரியற்ற மதுபான போத்தல்களைப் பெற முடியும் என்பதால், இந்த Duty Free Depature பாதுகாப்பு ஸ்டிக்கர் ஒட்டப்பட்ட மதுபான போத்தல்கள் உள்நாட்டுச் சந்தையில்

கிடைக்க இயலாதாயினும், உள்ளூர் சந்தைக்குள் நுழையும் அபாயம் உள்ளது. இது அரசாங்கத்தின் மதுவரி வருமானத்தில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

- எனவே, கொழும்பு துறைமுக நகரத்திலிருந்து வழங்கப்படும் மதுபான போத்தல்களுக்கு ஒரு புதிய பாதுகாப்பு ஸ்டிக்கரை கூடிய விரைவில் அறிமுகப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

- அவ்வாறே குடிசைக் கைத்தொழிலாக உள்ள பீடி உற்பத்தியை ஒழுங்குபடுத்துதல் மற்றும் பீடி உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் தெந்து இலை மீது இறக்குமதி வரிகளை விதித்தல் காரணமாக கடல் வழியாக தெந்து இலைகளை சட்டவிரோதமாக இறக்குமதி செய்தல் ஒரு பெரிய சவாலாகவே உள்ளது.

- இந்த சட்டவிரோத இறக்குமதிகளைக் கட்டுப்படுத்த கடற்படையுடன் ,ணைந்து செயல்பட்டு வருவதோடு, இந்தச் சுற்றிவளைப்புகளுக்குத் தேவையான தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் வசதிகள் இல்லாதது ஒரு சவாலாகவே உள்ளது.

- நாடு முழுவதும் சுற்றிவளைப்புகளை நடத்துவதற்கு சிரேஸ்ட மற்றும் கனிஷ்ட மட்டத்தில் அனுபவத்துடன் கூடிய அலுவலர்களின் வெற்றிடம் நிலவுகின்ற போதிலும் சுற்றிவளைப்புகளை வெற்றிகரமாக நடத்துதல் சவாலாகவே உள்ளது.

- போதைப்பொருள் மற்றும் மதுபானம் குறித்த புலனாய்வுத் தகவல்களைப் பெறுவதற்கான சிறப்பு மற்றும் தொழில்நுட்பப் பயிற்சித் திட்டங்கள் தற்போது இல்லாததும், அலுவலர்களுக்குப் பயிற்சி அளிப்பதில் உள்ள சிரமங்களும் சவாலாக உள்ளது

- முழுமையாக திணைக்களத்தில் பணியாற்றும் சீருடை அலுவலர்களில் சிரேஸ்ட அதிகாரிகள் ஓய்வு பெற்றமையால் தலைமை அலுவலகத்தில் உயர்மட்ட அலுவலர்களின் பற்றாக்குறை நிலவுவதன் காரணமாக வருமான சேகரிப்பு கணிசமாக பாதிக்கப்படுகிறது. அத்துடன், மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை மட்டங்களில் அலுவலர்களின் கடுமையான பற்றாக்குறை நிலவுகிறது.

**தற்போது, திணைக்கத்துக்குச் சொந்தமான வாகனங்களில் சுமார் 70% மானவை, 20 ஆண்டுகளுக்கும் மேலானவை என்பதால் பழுதுபார்ப்புக்கு அதிக செலவு செய்ய நேரிடுதல்.**

**மதுபான உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட வெற்றுப் போத்தல்கள் மற்றும் பியர் கான்களை முறையாக சேகரித்து மறுசுழற்சி செய்வதில் இலங்கை மதுவரித் திணைக்களம் விசேட கவனம் செலுத்தியுள்ளது. இது தொடர்பாக, மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் பிற தொடர்புடைய வெளியக நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு, மதுபான விற்பனை நிலையங்களுக்கு அருகில் இரும்புக் கூடைகள் நிறுவப்பட்டுள்ளன. சேகரிக்கப்பட்ட வெற்று பியர் கான்களை மறுசுழற்சி செய்வதை ஒழுங்குபடுத்துல்.**

## 2:3 நலன்புரி

### 2.3.1 அலுவலக நலன்புரி

- அரசாங்க வருமானத்தை அதிகரிப்பதில் அர்ப்பணிப்புடன் உள்ள மதுவரித் திணைக்களத்தில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களையும் ஊக்குவிக்கும் வகையில் ஊக்குவிப்புக் கொடுப்பனவு (அடிப்படை சம்பளத்தில் 25%) வழங்க நிதி அமைச்சிற்கு ஒரு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டதுடன் அமைச்சரவையின் அங்கீகாரத்துக்குப் பின்னர், 2024 ஆம் ஆண்டு முதல் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது.

- இலங்கை மதுவரித் திணைக்களப் பணியாளர்களின் நலனுக்காக 2024 ஆம் ஆண்டில் ஒரு சிற்றுண்டிச்சாலை பேணப்பட்டது.

### 2.3.2விளையாட்டுகள்

**அரச சேவை கிரிக்கட் போட்டி - 2025**

இலங்கை மதுவரித் திணைக்கள கிரிக்கெட் அணியானது, அரசாங்க சேவைகள் கிரிக்கெட் போட்டித்தொடரில் “அ” பிரிவில் விளையாடுவதுடன், நாட்டின் முதல் 10 அணிகள் “அ“ பிரிவில் போட்டியிடும். அதன்படி, 2025 ஆம் ஆண்டு போட்டித்தொடரின் முடிவுகளின் அடிப்படையில், ,லங்கை மதுவரித் திணைக்கள கிரிக்கெட் அணியானது 2026 ஆம் ஆண்டிலும் “அ” பிரிவில் பிரதிநிதித்துவம் செய்ய தகுதி பெற்றுள்ளது.



மதுவரித் திணைக்களத்தின் “பி” பிரிவு கிரிக்கெட் அணியும் அரச சேவை கிரிக்கெட் போட்டியின் “ஜி”அணியைப் பிரதிநிதிப்படுத்தி பங்கேற்கிறது.

இலங்கை மதுவரித் திணைக்களத்தின் விளையாட்டு மற்றும் நலன்புரிச் சங்கம், மதுவரித் திணைக்கள அலுவலர்களுக்காக நாடு தழுவிய மென்பந்து கிரிக்கெட் போட்டியை ஏற்பாடு செய்தது, இதில் மதுவரித் தலைமை அலுவலக அணி சாம்பியன் பட்டத்தை வென்றது.




- மதுவரித் திணைக்களத்தின் “பி” பிரிவு கிரிக்கெட் அணியும் அரச சேவை கிரிக்கெட் போட்டியின் “ஜி”அணியைப் பிரதிநிதிப்படுத்தி பங்கேற்கிறது.

- இலங்கை மதுவரித் திணைக்களத்தின் விளையாட்டு மற்றும் நலன்புரிச் சங்கம், மதுவரித் திணைக்கள அலுவலர்களுக்காக நாடு தழுவிய மென்பந்து கிரிக்கெட் போட்டியை ஏற்பாடு செய்தது, இதில் மதுவரித் தலைமை அலுவலக அணி சாம்பியன் பட்டத்தை வென்றது.




**39 ஆவது தேசிய அரச சேவைத் தடகள விழா - 2025**

இம்மாதம் 20 மற்றும் 21 ஆம் தேதிகளில் தியகமவில் உள்ள மஹிந்த ராஜபக்ஷ மைதானத்தில் நடைபெற்ற 39 ஆவது தேசிய அரச சேவை தடகளப் போட்டியில், மதுவரித் திணைக்களம், வரலாற்றில் முதன்முறையாக, அனைத்து வயதுப் பிரிவினருக்குமான போட்டியின் பயிலுனர் பிரிவில் ஒட்டுமொத்தமாக இரண்டாம் இடத்தைப் பிடித்தது.

இப்போட்டியில் அலுவலர்கள் பெற்ற சாதனைகள் பின்வருமாறு.

**பயிலுனர் வயதுப் பிரிவு**

400மீ தடை ஓட்டம்

தங்கப் பதக்கம்
மதுவரிக் காவலாளர் லஹிரு கோதாகொடகே

110மீ தடை ஓட்டம்
வெண்கலப் பதக்கம்
மதுவரிப் பரிசோதகர் தெனுஷ்க அமிலதிஸ்ஸ

100மீ x 4 தொடர் ஓட்டம் (ஆண்கள்) தங்கப் பதக்கம் மற்றும் 400மீ ஒ 4 தொடர் ஓட்டம் (ஆண்கள்) வெள்ளிப் பதக்கம்

மதுவரிப் பரிசோதகர் தெனுஷ்க அமிலதிஸ்ஸ
மதுவரிப் பரிசோதகர் உதார சம்பத்
மதுவரிக் கோப்ரல் லலந்த ஸ்ரீ நிஸ்ஸங்க
மதுவரிப் பரிசோதகர் இஷங்க அமரசூரிய
மதுவரிக் காவலாளர் லஹிரு கோதாகொடகே

தட்டு எறிதல்
வெண்கலப் பதக்கம்
மதுவரிப் பரிசோதகர் ஜீவந்த லியனகே

35-39 வயதுப் பிரிவு
100அ ஓட்டம் - வெண்கலப் பதக்கம் - மதுவரிப் பரிசோதகர் அமில மானகே

50-54 வயதுப் பிரிவு (ஆண்கள்)
உயரம் பாய்தல் மற்றும் 110அ தடை தாண்டி ஓட்டம் தங்கப் பதக்கம்
மதுவரிப் பரிசோதகர் சமந்த விஜேரத்ன

நீளம் பாய்தல் மற்றும் தட்டு எறிதல்
வெண்கலப் பதக்கம்
மதுவரிப் பரிசோதகர் சமந்த விஜேரத்ன

50 - 54 வயதுப் பிரிவு (பெண்கள்)
தட்டு எறிதல் மற்றும் ஈட்டி எறிதல்
வெண்கலப் பதக்கம்
மதுவரி சார்ஜன் மேஜர் தேவிகா நிலந்தி

60 - 64 வயதுப் பிரிவு (ஓய்வுபெற்ற ஆண்கள்)
1000m நடத்தல் வெண்கலப் பதக்கம் - ஓய்வு பெற்ற மதுவரிக் கோப்ரல் என்.எச்.எம்.டபி.பண்டார



**அரச சேவை ஹொக்கி போட்டி 2025**

அரச சேவை ஹொக்கி போட்டிக்கு மதுவரித் திணைக்கள ஹொக்கி அணியினர் பங்குபற்றியதுடன், அதில் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்ற

மதுவரிப் பரிசோதகர் எஸ்.எம்.ஏ.என்.சேனாநாயக்க போட்டியின் சிறந்த கோல் கீப்பராக விருது பெற்றார்.



### அரச சேவை வொலிபோல் போட்டி 2025

அரச சேவை வொலிபோல் போட்டி 2025 இற்கு மதுவரித் திணைக்கள வொலிபோல் அணியினர் பங்குபற்றினர்.



# அத்தியாயம் – 03

## வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று

3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று

3.3 நிதிப் பாய்ச்சல் பற்றிய கூற்று

3.4 நிதிச் செயலாற்றுகைக் கூற்று - வெகுமதி நிதியம்

3.5 நிதி நிலைமை பற்றிய கூற்று - வெகுமதி நிதியம்

3.6 நிதிப் பாய்ச்சற் கூற்று - வெகுமதி நிதியம்

3.7 நிதிக் கூற்றுக் குறிப்புகள்

3.8 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

3.9 நி.ஒ.208 இன் பிரகாரம், திணைக்கள முகவராக இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு 2025 இல் வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள்

3.10 நிதியல்லாச் சொத்துகளை அறிக்கையிடலின் செயலாற்றுகை

3.11 கணக்காய்வாளரின் அறிக்கை - இலங்கை மதுவரித் திணைக்களம் (இணைப்பு 01)

3.12 கணக்காய்வாளரின் அறிக்கை - மதுவரித் பரிசு நிதி (இணைப்பு 02)

## 3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று (2025 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்தின் பொருட்டு)

ஏசீஏ- எப்

**2025 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று**

(ரூபா)

| திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2025 | | குறிப்பு | உண்மை நிலை 2025 | உண்மை நிலை 2024 | |
|---|---|---|---|---|---|
| - | **வருமானப் பெறுகைகள்** | | **233,086,942,460.00** | **214,583,521,358.00** | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏசீஏ-1 |
| | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | 233,086,942,460.00 | 214,583,521,358.00 | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | ஏசீஏ-1 |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | - | - | ஏசீஏ-1 |
| - | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | **233,086,942,460.00** | **214,583,521,358.00** | |
| - | **வருமானமற்ற பெறுகைகள்** | | **3,502,666,512.00** | **3,449,024,290.00** | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 2,744,508,000.00 | 2,209,570,000.00 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 704,915,897.00 | 1,188,778,755.00 | ஏசீஏ-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 53,242,615.00 | 50,675,535.00 | ஏசீஏ-5 |
| | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | - | - | |
| - | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **3,502,666,512.00** | **3,449,024,290.00** | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)** | | **236,589,608,972.00** | **218,032,545,648.00** | |
| | **திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)** | | 233,689,612,499.00 | 215,512,702,254.00 | |
| | **தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)** | | **2,899,996,473.00** | **2,519,843,394.00** | |
| | **கழி : செலவினம்** | | | | |
| - | **மீண்டுவரும் செலவினம்** | | **2,699,314,951.00** | **2,356,782,858.00** | |
| 1,202,500,000.00 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 1,168,011,504.00 | 1,053,091,312.00 | ஏசீஏ-2(ii) |
| 1,677,000,000.00 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 1,526,573,145.00 | 1,298,271,015.00 | ஏசீஏ-2(ii) |
| 7,000,000.00 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 4,730,302.00 | 5,420,531.00 | ஏசீஏ-2(ii) |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | ஏசீஏ-2(ii) |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | - | - | ஏசீஏ-2(ii) |
| **2,886,500,000.00** | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)** | | **2,699,314,951.00** | **2,356,782,858.00** | |
| | **மூலதனம் செலவினம்** | | **191,259,466.00** | **126,911,122.00** | |
| 141,000,000.00 | மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 70,498,143.00 | 40,661,243.00 | ஏசீஏ-2(ii) |
| 555,000,000.00 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 102,992,813.00 | 77,349,931.00 | ஏசீஏ-2(ii) |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | - | ஏசீஏ-2(ii) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | ஏசீஏ-2(ii) |
| 20,000,000.00 | திறன் விருத்தி | 14 | 17,768,510.00 | 8,899,948.00 | ஏசீஏ-2(ii) |
| 20,000,000.00 | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | - | - | ஏசீஏ-2(ii) |
| **736,000,000.00** | **மொத்த மூலதனம் செலவினம் (எ)** | | **191,259,466.00** | **126,911,122.00** | |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | 278,335,783.00 | 149,842,627.00 | ஏசீஏ-4 |
| | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | 53,695,107.00 | 39,702,842.00 | ஏசீஏ-5 |
| | **ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்** | | - | - | |
| | **மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)** | | **332,030,890.00** | **189,545,469.00** | |
| | **மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)** | | **3,222,605,307.00** | **2,673,239,449.00** | |
| - | **டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)** | | **(322,608,834.00)** | **(153,396,055.00)** | |
| | **பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி** | | (322,608,834.00) | (153,849,812.00) | ஏசீஏ-7 |
| | **டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி** | | - | 453,757.00 | ஏசீஏ-3 |
| | | | **(322,608,834.00)** | **(153,396,055.00)** | |

1

## 3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று

ஏசீஏ -பீ

**2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான**
**நிதி நிலைமைக் கூற்று**

| | குறிப்பு | உண்மை நிலை<br>2025<br>ரூபா | 2024<br>ரூபா |
|---|---|---|---|
| **நிதி சொத்துக்கள் அற்றது** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 2,398,858,198.00 | 2,290,807,260.00 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5ஏ | 131,778,421.00 | 131,325,930.00 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | - | 453,757.00 |
| **மொத்த சொத்துக்கள்** | | **2,530,636,619.00** | **2,422,586,947.00** |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | (1,711,005,556.00) | (1,284,877,933.00) |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 2,398,858,198.00 | 2,290,807,260.00 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | 1,842,783,977.00 | 1,416,203,863.00 |
| தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - | 453,757.00 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **2,530,636,619.00** | **2,422,586,947.00** |

பக்க இலக்கம் 07 முதல் 40 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 41 முதல் 92 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். **2025 ஆம் ஆண்டின் 17.12.2025 திகதியிடப்பட்ட இல 02/2025 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலைமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.** அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் எண் தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 38(1) (இ) இன் படி நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:கலாநிதி.ஹர்சன சூரியப்பெரும
பதவி :செயலாளர்
திகதி : 27/2/26

ආචාර්ය හර්ෂණ සූරියප්පෙරුම
මහා භාණ්ඩාගාරයේ සහ මුදල්,
ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශයේ ලේකම්
මුදල් අමාත්‍යාංශය
කොළඹ - 01

கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்: எம்.பி.என்.ஏ.பேமரத்ன
பதவி : மதுவரி ஆணையாளர்
திகதி : 2026/02/19

M.B.N.A. Pemarathna
Commissioner General of Excise
Excise Department of Sri Lanka
No.353,Kotte Road,
Rajagiriya.

பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பெயர் :ஆர்.ஆர்.புலத்சின்ஹல
திகதி : 17/2/26

R. R. Bulathsinhala
Chief Finance Officer
Excise Department of Sri Lanka
No. 353, Kotte Road, Rajagiriya.

2

## 3.3 நிதிப் பாய்ச்சல் பற்றிய கூற்று

ஏசீஏ- சீ

### 2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று

| | உண்மை | |
|---|---|---|
| | **2025**<br>ரூபா | **2024**<br>ரூபா |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | 233,086,942,460.00 | 214,583,521,358.00 |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | - | - |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 273,308,346.00 | 118,189,880.00 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 2,744,508,000.00 | 2,209,570,000.00 |
| முற்பணங்களை அறவிடல் | 41,225,686.00 | 42,856,171.00 |
| வைப்புக்களின் பெறுகை | 704,915,897.00 | 1,188,778,755.00 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **236,850,900,389.00** | **218,142,916,164.00** |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடடுக் கொடுப்பனவுகள் | 2,686,032,909.00 | 2,346,072,472.00 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 4,730,302.00 | 5,420,531.00 |
| மூலதனச் சொத்துகளின் புனரமைப்பு, மூலதன மாற்றங்கள்இ திறன் வளர்ப்பு மற்றும் பிற மூலதனச் செலவினங்கள் | 40,905,981.00 | 23,539,264.00 |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 3,744,623.00 | 2,013,843.00 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 233,689,612,499.00 | 215,512,702,254.00 |
| முற்பணக் கொடுப்பனவு | 44,999,236.00 | 31,574,501.00 |
| வைப்புக் கொடுப்பனவு | 278,335,783.00 | 149,842,627.00 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **236,748,361,333.00** | **218,071,165,492.00** |
| **தொழிற்பாடடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **102,539,056.00** | **71,750,672.00** |
| **முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | - | - |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | - | - |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:** | | |
| மூலதனச் சொத்துகளின் நிர்மாணம், கொள்முதல் மற்றும் இதர முதலீட்டு பெறுதல்கள் | 102,992,813.00 | 71,296,915.00 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | **102,992,813.00** | **71,296,915.00** |
| **முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)** | **(102,992,813.00)** | **(71,296,915.00)** |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)** | **(453,757.00)** | **453,757.00** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| உள்ளூர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | - | - |
| ***கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:*** | | |
| உள்ளுர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | - | - |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)** | - | - |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)** | **(453,757.00)** | **453,757.00** |
| **ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | **453,757.00** | - |
| **டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | - | **453,757.00** |

3

## 3.4 நிதி செயலாற்றுகைக் கூற்று - மதுவரி வெகுமதி நிதியம்

| 2025 டிசம்பர் 31 ஆம் திகதி நிறைவடைந்த வருடத்திற்கான நிதி செயலாற்றுகைக் கூற்று | | |
|---|---|---|
| (ரூபாவில்) | | |
| | | |
| | 2025 | 2024 |
| வருமானம் | - | |
| கூட்டுத் தண்டப்பணப் பெறுகை | 176,228,010 | 159,642,538 |
| சிகரட் தண்டப்பணம் | 5,093,425 | 4,254,400 |
| **மொத்த வருமானம்** | **181,321,435** | **163,896,938** |
| | | |
| செலவு | - | - |
| வெகுமதி நிதிக் கொடுப்பனவு | 61,223,403 | 36,860,836 |
| அரசிறை வருமானத்திற்கான கொடுப்பனவுகள் - கூட்டுத் தண்டப் பண வருமானம் 15% | 26,238,601 | 23,946,381 |
| அரச வருமானத்திற்கான கொடுப்பனவு - சிகரட் தண்டப்பணம் 75% | 3,820,069 | 3,190,800 |
| புகையிலை நிதியத்திற்கான கொடுப்பனவு | 1,273,356 | 1,063,600 |
| விசேட சுற்றிவளைப்புகள் | - | - |
| ஏனைய கொடுப்பனவு | - | - |
| கழிவு | - | - |
| மதிப்பிறக்கம் (அட்டவணை 01) | | 11,421,663 |
| உரிமதாரர்களிற்கு மீளச் செலுத்துதல் | | 11,707,328 |
| **மொத்தச் செலவு** | | 5000 |
| செலவு | **92,555,429** | **76,488,280** |
| | | |
| **மிகை / (குறைபாடு)** | **88,766,006** | **87,408,658** |

**தயாரித்தவர் :- ஒப்பம்**
**பரிசீலித்தவர்:- ஒப்பம்.**

ஒப்பம்

**ஆர்.ஆர்.புலத்சிங்ஹல**

**பிரதம நிதி அலுவலர்**

## 3.5 நிதி நிலைமை பற்றிய கூற்று - மதுவரி வெகுமதி நிதியம்

| இலங்கை மதுவரித் திணைக்களம் – மதுவரி வெகுமதி நிதியம் | | |
|---|---|---|
| 2025 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமை பற்றிய கூற்று | | |
| பண அலகு ரூபாவில் | **2025** | **2024** |
| **சொத்துகள்** | - | - |
| **நடைமுறைச் சொத்துகள்** | | |
| TCR பெறுகைகள், கொடுப்பனவுக் கணக்குகள் | 393,900,740 | 311,340,660 |
| பெற வேணடிய கூட்டுத் தண்டப்பணம் | 11,430,000 | - |
| பெற வேணடிய சிகரட் தண்டப்பணம் | - | - |
| | **405,330,740** | **311,340,660** |
| | | |
| **நடைமுறையல்லாச் சொத்துகள்** | | |
| காணிகளும் கட்டடங்களும்(அட்டவணை02) | | 47,134,000 |
| வாகனங்கள் (அட்டவணை 03) | | 454,771 |
| தளபாடங்களும் உபகரணமும் (அட்டவணை 04) | | 6,879,101 |
| மின் உபகரணங்கள் (அட்டவணை 05) | | 4,223 |
| அலுவலக உபகரணம் (அட்டவணை 06) | | 42,654,489 |
| விளையாட்டு உபகரணம் (அட்டவணை 07) | | 2,011 |
| நூலக புத்தகங்கள் (அட்டவணை 08) | | 13,034 |
| ஏனைய உபகரணம் (அட்டவணை 09) | | 2,972 |
| மதிப்பிறக்கச் சொத்துகளை கொள்வனவு செய்தல | | - |
| மதிப்பிறக்க ஒதுக்கீட்டு நிதியம் | | 42,103,687 |
| | | **139,248,288** |
| **மொத்த சொத்துகள்** | **405,330,740** | **450,588,948** |
| | | |
| **பொறுப்புகள்** | | |
| **குறுகிய கால பொறுப்புகள்** | | |
| அரச வருமானத்திற்கு செலுத்த வேண்டிய கூட்டுத்தண்டப் பணம் | 4,492,490 | - |
| அரச வருமானத்திற்கு செலுத்த வேண்டிய சிகரட் பணம் | - | - |
| புகையிலை நிதியத்திற்கு செலுத்த வேண்டிய தொகை | - | - |
| செலுத்த வேண்டிய வெகுமதி நிதியம் | 63,762,725 | - |
| | | |
| **நீண்ட கால பொறுப்புகள்** | | |
| புகையிலை நிதியத்திற்கு செலுத்த வேண்டிய நிதி | 26,700,706 | 25,427,350 |
| | | |
| **மொத்தள பொறுப்புகள்** | **94,955,921** | |
| | | |
| **தேறிய சொத்துகள்** | **310,374,819** | **425,161,598** |
| | | |
| **தேறிய சொத்துகள்/பங்குகள்** | - | |
| திரட்டிய நிதியம் | 221,608,813 | 337,752,940 |
| முந்தைய வருட சீராக்கல் | | |
| (குறைபாடு) / மிகை | **88,766,006** | **87,408,658** |
| **மொத்தப் பங்குகள்** | **310,374,819** | **425,161,598** |

**தயாரித்தவர் :- ஒப்பமிடப்பட்டது**
**பரிசீலித்தவர்:- ஒப்பமிடப்பட்டது**

பக்க இலக்கம் 07 முதல் 08 வரையான கணக்குத் தகவல்கள் மற்றும் பக்க இலக்கம் 18 முதல் 44 வரை உள்ளடங்கியுள்ள குறிப்புகளின் விபரமும் இந்த நிதிக் கூற்றுகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலிற்கான பொறுப்பை நிர்வாகக் குழு கொண்டுள்ளது. 2023 தொடர்பில் திருத்திய நிதிக்கூற்றை நிர்வாகக் குழு அங்கீகரித்தது.

**ஒப்பம்**
**கே.ஏ.எஸ்.லக்சிறீனி குணதிலக**
**மதுவரி ஆணையாளர்(நிர்வாகம் மற்றும் மனித வளம்)**

**ஒப்பம்**
**திஸ்ஸ குமார ராஜபக்ச**
**மதுவரி ஆணையாளர்**
**(சட்ட வலுப்படுதத‌ல்)**

**ஒப்பம்.**
**ஏம்.பி.என்.ஏ. பேமரத்ன**
மதுவரி ஆணையாளர் நாயகம்

## 3.6 நிதிப் பாய்ச்சற் கூற்று- மதுவரி வெகுமதி நிதியம்

**இலங்கை மதுவரித் திணைக்களம் – மதுவரி வெகுமதி நிதியம்**
**2025 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான நிதிப் பாய்ச்சற் கூற்று**
**(ரூபாவில்)**

| | 2025 | 2024 |
|---|---|---|
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| | | |
| **பெறுகைகள்** | | |
| கூட்டுத்தண்டப்பணப் பெறுகை | 174,924,010 | 159,642,538 |
| சிகரட் தண்டப்பபணப் பெறுகை | 5,093,425 | 4,254,400 |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான மொத்தப் பெறுகை** | **180,017,435** | **163,896,938** |
| | | |
| **கொடுப்பனவு** | | |
| கூட்டு வெகுமதி நிதி | 45,511,245 | 36,860,836 |
| அரசிறை வருமானத்திற்கு | 25,566,180 | 27,137,181 |
| விசேட சுற்றிவளைப்பிற்கு | - | - |
| மதிப்பிறக்க ஒதுக்கீட்டு நிதியத்திற்கு(அட்டவணை 01) | | - |
| உரிமதாரர்களிற்கு மீளக் கொடுப்பனவு | | 5,000 |
| ஏனையவை | 26,379,930 | 3,771,335 |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான மொத்தக் கொடுப்பனவு** | **97,457,355** | **64,003,017** |
| **தேறிய நிதிப் பாய்ச்சல்** | **82,560,080** | **99,893,921** |
| | | |
| **முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| ஹைட்ரோ மீற்றர் கொள்வனவு | | (6,767,300) |
| மதிப்பிறக்க ஒதுக்கீட்டு நிதியம் (அட்டவணை 01) | | (11,421,663) |
| முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் | **-** | **(18,183,963)** |
| | | **-** |
| காசில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு/ குறைவு | **82,560,080** | 81,704,958 |
| காலப்பகுதியின் ஆரம்பத்தில் இருந்த காசு | 311,340,660 | 229,635,702 |
| **2023.12.31 திகதியன்று பண மீதி** | **393,900,740** | **311,340,660** |

**தயாரித்தவர்:-ஒப்பம்**

**பரிசீலித்தவர்:- ஒப்பம்**

ஒப்பம்

**ஆர்.ஆர்.புலத்சிங்ஹல**

**பிரதான நிதி அலுவலர்**

### 3.7 நிதியியற் கூற்றுக் குறிப்புகள்

வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

| வருமானக் குறியீடு | வருமானக் குறியீட்டு விபரம் | வருமான மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப மதிப்பீடு (ரூ.) | இறுதி மதிப்பீடு (ரூ.) | தொகை (ரூ.) | இறுதி வருமான மதிப்பீடு % ஆக (ரூ.) |
| 1002.04.01 | மதுபானம் | 240,000,000,000.00 | 226,000,000,000.00 | 231,563,572,191.00 | 102.46 |
| 1002.06.00 | புகையிலை வரி | 2,000,000,000.00 | 1,400,000,000.00 | 1,545,090,769.00 | 110.36 |

### 3.8 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

| ஒதுக்கீட்டு வகை | ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடு | | உண்மைச் செலவினம் (ரூ.) | பயன்படுத்தப்பட்ட ஏற்பாட்டை இறுதி ஏற்பாட்டுத் தொகையின் சதவீதம் (%) ஆக |
|---|---|---|---|---|
| | ஆரம்ப ஏற்பாடு (ரூ.) | இறுதி ஏற்பாடு (ரூ.) | | |
| மீண்டெழும் | 2,886,500,000.00 | 2,886,500,000.00 | 2,,699,314,951.00 | 93.52 |
| மூலதன | 736,000,000.00 | 736,000,000.00 | 191,259,466.00 | 25.99 |

### 3.9 நி.ஒ.208 இன் பிரகாரம் திணைக்கள முகவராக இலங்கை மதுவரித் திணைக்கத்திற்கு 2025 இல் வழங்கப்பட்ட ஒதுக்கீடு

இல்லை

### 3.10 நிதியல்லாச் சொத்துகளை அறிக்கையிடலின் செயலாற்றுகை

| சொத்துகளின் குறியீடு | குறியீட்டு விபரம் | 31.12.2025 அன்று பொருட் கணக்கெடுப்பு அறிக்கையின்படி மீதி (ரூ.) | 31.12.2025 திகதிய நிதி நிலை அறிக்கையின் படி மீதி (ரூ.) | எதிர்காலத்தில் கணக்கிட வேண்டியவை | வளர்ச்சி % ஆக அறிக்கையிடல் |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டடங்களும் அமைப்புகளும் | 792,308,830.21 | 792,308,830.21 | | 100% |
| 9152 | இயந்திர உபகரணங்கள் | 1,140,117,455.07 | 1,140,117,455.07 | | 100% |
| 9153 | காணிகள் | 403,505,000.00 | 403,505,000.00 | | 100% |
| 9154 | தொட்டுணர முடியாத சொத்துகள் | 62,926,913.21 | 62,926,913.21 | | 100% |
| 9155 | உயிரியல் சொத்துகள் | - | - | | - |
| 9160 | நடைபெறும் பணிகள் | - | - | | - |
| 9180 | குத்தகைக்கு விடப்பட்ட சொத்துகள் | - | - | | - |

### 3.11 கணக்காய்வாளரின் அறிக்கை - இலங்கை மதுவரித் திணைக்களம் (இணைப்பு 01)

### 3.12 கணக்காய்வாளரின் அறிக்கை - மதுவரித் பரிசு நிதி (இணைப்பு 02)

# அத்தியாயம் – 04

## செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1 அறிமுகம்

4.2 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள்

4.2.1 நிர்வாகப் பிரிவு

4.2.2 வருமானப் பிரிவு

4.2.3 சட்ட வலுப்படுத்தற் பிரிவு

4.2.4 கணக்கீட்டுப் பிரிவு

4.2.5 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

4.2.6 மனித வளப் பிரிவு

4.2.7 தகவல் தொழில்நுட்பப் பிரிவு

4.2.8 போக்குவரத்து, ஆதரவளிப்புப் பிரிவு

4.2.9 கற்கைகள் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு

4.2.10 புள்ளிவிபரப் பிரிவு

4.2.11 வழங்கல்தொடர் ஒழுங்கமைப்புப் பிரிவு

4.2.12 சட்டப் பிரிவு




## 4.1 அறிமுகம்

நாடு முழுவதும் அமைந்துள்ள இலங்கை மதுவரித் திணைக்களத்தின் அனைத்து அலுவலகங்களையும் நிர்வகிக்கும் தலைமை அலுவலகம்,முதன்மையாக நிர்வாகம், வருமானம், சட்ட வலுப்படுத்தல், கணக்குகள், உள்ளகக் கணக்காய்வு, மனித வளங்கள், தகவல் மற்றும் தொழில்நுட்பம், போக்குவரத்து மற்றும் ஆதரவளிப்பு, கற்கைகள் மற்றும் ஆராய்ச்சி, புள்ளிவிவரங்கள், வழங்கல் தொடர் ஒழுங்குபடுத்தல், சட்ட மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகியபிரிவுகளைக் கொண்டுள்ளது.

2025 ஆம் ஆண்டிற்காக நிதி அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்ட செயல் திட்டத்தின்படி, இந்த நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டெண்கள் ஒவ்வொரு பிரிவிற்கும் தயாரிக்கப்பட்டுள்ளன. 2025 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட செயல் திட்டத்தின்படி, இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட வருமான இலக்கு ரூ. 227.4 பில்லியன் ஆகும்.

மேற்படிட இலக்கை அடைவதற்குப் பங்களித்த அனைத்து பிரிவுகளின் செயலாற்றுகையைக் கருத்தில் கொண்டு, திணைக்களத்தின் ஒட்டுமொத்த செயலாற்றுகை உகந்த மட்டத்தினை அடையப் பெற்றுள்ளது

## 4.2 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (2025 செயற் திட்ட அடிப்படையில்)

| திணைக்களத்தின் செயற்பாட்டுப் பிரிவுகள் | விசேட சுட்டிகள் | | உண்மை வெளியீடு, எதிர்பார்த்த வெளியீட்டு சதவீதமாக ( % ) | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | >100% | 90 % - 100% | 75% - 89 % | 50 % - 74 % | 0% - 50% |
| 4.2.1 நிர்வாகப் பிரிவு | நிர்வாகம் மற்றும் தாபன நடவடிக்கைகள் | | | 97% | | | |
| 4.2.2 வருமானப் பிரிவு | 2025 இன் எதிர்பார்த்த வருமானத்தை சேகரித்தல் | மதுபான வரி | | 100% | | | |
| | | புகையிலை வரி | | | | 70% | |
| 4.2.3 சட்ட வலுப்படுத்தல் பிரிவு | 1. உரிய கட்டளைச் சட்டங்களை செயற்படுத்தல; போதைப்பொருட் குற்ற அறிக்கைகள் புகையிலை தொடர்பான சுற்றிவளைப்பு | | 103% | | | | |
| | 2. மதுவரி உரிமங்களிற்கான தொழில்நுட்ப குற்ற அறிக்கைகள் | | 119.8% | | | | |
| 4.2.4 கணக்கீட்டு பிரிவு | 2025 வருடத்தின் சகல கணக்கீட்டு நடவடிக்கைகள் | | | 100% | | | |
| 4.2.5 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | 2025 வருடத்தில் மேற்கொள்ள வேண்டிய உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | | 134% | | | | |
| 4.2.6 மனித வளப் பிரிவு | சகல அலுவலர்களிற்கும் பயிற்சி | | | | 76% | | |
| 4.2.7 தகவல் தொழில்நுட்பப் பிரிவு | இணையத்தளத்தை இற்றைப்படுத்தல் | | | 100% | | | |
| | புதிய வேலைத்திட்டங்களை செயற்படுத்தல் | 1. RAMIS முறைக்கு இடைவெட்டுமுகத்தின் ஊடாக தரவு வழங்கல் | | 100% | | | |
| | | 2. ASYCUDA முறை ஊடாக இணைய வசதிகள் வழங்கல் | | 100% | | | |
| | | 3. RASEDமுறை தயாரித்தல் | | 100% | | | |
| | | 4. ஸ்ரிக்கர் வேலைத்திட்டத்தை செயற்படுத்தத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளைத் தயாரித்தல், அதன் பொருட்டு உடன்படிக்கையைச் செய்தல் | | 100% | | | |
| 4.2.8 போக்குவரத்து, ஆதரவளிப்பு பிரிவு | போக்குவரத்து, ஏனைய பணிகள் | | | | 80% | | |
| | பிரேரிக்கப்பட்ட கட்டடங்களின் நிர்மாண நடவடிக்கைகள் | | | | | | 10% |
| 4.2.9 கற்கை மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு | கற்கை நடவடிக்கைகள் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் | | | 90% | | | |
| 4.2.10 புள்ளிவிபரப் பிரிவு | புள்ளிவிபர நடவடிக்கைகளும் தரவு வெளியிடுதலும் | | | 90% | | | |
| 4.2.11 வழங்கல்தொடர் ஒழுங்கமைப்புப் பிரிவு | ஸ்ரிக்கர் வேலைத்திட்டம் | உள்நாடு | | 95% | | | |
| | | வெளிநாடு | | 95% | | | |
| 4.2.12 சட்டப் பிரிவு | சட்ட தேவைப்பாடுகள்,எதிர்பார்த்த புதிய தேர்ச்சிகள் | | | 90% | | | |
| 4.2.13 சமூகப் பாதுகாப்புப் பிரிவு | மதுபானம், போதைப்பொருள் விழிப்புணர்வு மற்றும் சமூக நலன்புரி செயற்பாடுகள் | | 139% | | | | |
| | தரமான மதுபானங்களை வழங்குவதன் மூலம் சுகாதார சீர்கேடுகளிலிருந்து மக்களின் பாதுகாப்பை உறுதி செய்தல் | | | 100% | | | |

# அத்தியாயம் – 05

## நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை

5.1 அறிமுகம்

5.2 நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடிப்படையில் இலங்கை மதுவரித் திணைக்களத்தின் செயற்பாடுகள் மற்றும் முன்னேற்றம்

### 5.1 அறிமுகம்

இலங்கையில் நிலைபேண்தகு அபிவிருத்தி பற்றிய தேசியக் கொள்கை, 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேண்தகு அபிவிருத்தி பற்றிய சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தாபிக்கப்பட்டுள்ள நிலையான அபிவிருத்தி தொடர்பான சபையின் வழிகாட்டலின் கீழ் சகல அரச நிறுவனங்கள், கல்வியியல் நிறுவனங்கள், சிவில் சமூக அமைப்புகள் என்பன, 2030 இல் நிறைவேற்ற வேண்டிய நிலையான அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு 17 நிலையான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றுதற்காக செயற்படுத்த வேண்டிதொரு வேலைத்திட்டமாகும். இலங்கையின் நிலையான அபிவிருத்தி பொருட்டு அரச வருமானம் சேகரிக்கும் பிரதான மற்றும் பொறுப்புவாய்ந்த நிறுவனம் ஒன்றாக இலங்கை மதுவரித் திணைக்களமானது, 2024 இன் செயற் திட்டத்தை இனங்காணுகையில் 17 நிலையான அபிவிருத்தி இலக்குகளில் பிரதானமாக 05 இலக்குகளை செயற்படுத்துவதற்கு ஒவ்வொரு பிரிவுத் தலைவர்களுடனும் கலந்துரையாடி உடன்பாடொன்று எட்டப்பட்டது. அவ்விலக்குகளாவன, இலக்கு 01, 03, 12, 16, 17 ஆகும். இது பற்றி விரிவாக ஐந்தாம் அத்தியாயத்தின் 5.2 இன் கீழ் காட்டப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்ட விடயங்களில் விசேடமாக சகல விதத்திலும் வறுமையை ஒழிக்கும் முதலாவது இலக்கை செயற்படுத்தும் பொருட்டு 2025 இல் எம்மால் ரூபா 254.5 பில்லியன் வருமானத்தை சேகரிக்க முடிந்ததுடன், அது இலங்கையின் ஒட்டுமொத்த மக்களின் விருத்தி பொருட்டு பொதுத் திறைசேரிக்கு வரவு வைக்கப்பட்டுள்ளது. வறுமையை ஒழிப்பதற்கு பிரதான காரணியாக பொருளாதார அபிவிருத்தியில் நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்தும் சட்ட விரோத அற்ககோல் மற்றும் மதுபானங்களை சமுதாயத்திலிருந்து அகற்றுதல் மிக முக்கியமானதாகும். இப்பணியில் இலங்கை மதுவரித் திணைக்களம் விசேட பங்களிப்பை வழங்குகிறது. புகையிலைப் பாவனை மனித உடலுக்குத் தீங்கு விளைவிப்பது என்பதால் புகையிலைப் பாவனையைக் கட்டுப்படுத்தும் நோக்கிலும் அரசிறை வருமானத்தை உயர்த்துவதன் ஊடாக மக்களுக்குத் தேவையான நிவாரணத்தை வழங்கும் நோக்கில் பீடிக்கு புதிய வரிக் கொள்கையை (1999 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க புகையிலை சட்டம்) 2023.01.01 இலிருந்து செயற்படுத்த திட்டமிடப்படுவதுடன், அதன் ஊடாக அனைத்து பீடி உற்பத்தியாளர்களையும் பதிவு செய்து வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. சுற்றிவளைப்பை மேற்கொள்வதன் மூலம் மாத்திரம் பிரச்சனைக்கு தீர்வை வழங்க முடியாது என்பதுடன் அதற்குரிய கேள்வியைக்குறைப்பது சிறப்பானதாகும். அதற்கிணங்க, சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அதற்குரிய ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து பொதுசன விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டது.

பேண்தகு அபிவிருத்தி இலக்கு 03: வறுமைக்கும் நெருக்கடிக்கும் முகங்கொடுத்துள்ள மக்களின் நலன் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு பொருட்டு இலங்கை மதுவரித் திணைக்களம் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகிறது. வருடாந்தம் மதுபானம் மற்றும் புகையிலை தொடர்பான உற்பத்திகளுக்கு வரியை அதிகரிப்பதனால் அதன் கொள்வனவாற்றலைக் குறைப்பதுடன் அவற்றுக்கான கேள்வியையும் குறைக்கும். பொதுமக்களிடையே மதுபானம் பெறக்கூடிய வரம்புகளைக் கடுமையாக்குதலினையும் வெளியிடப்படும் சட்ட ரீதியான மதுபானங்களை முறையான தரத்தில் உற்பத்தி செய்தலினையும் இயன்றவரை மக்களை மதுபானத்தைத் தவிர்ப்பதற்காக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதலினையும் சூழலுக்குப் பாதிப்பை குறைப்பதற்குரிய நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுதலையும் அது தொடர்பான முக்கிய நடவடிக்கைகளாகக் காட்டலாம்.

பேண்தகு அபிவிருத்தி இலக்கு 12: மதுபான உற்பத்தி செய்யும் சகல உற்பத்தியாளர்களும் அந்நடவடிக்கைகளின் போது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கட்டளைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கமைய நடவடிக்களை மேற்கொண்டு நீர்நிலைகளைத் தூய்மையாக வைத்திருப்பதற்காக பொயிலரை செயற்படுத்தும்போதும் நீரை சுத்திகரிக்கும் போதும் உரிய உள்ளூராட்சி நிறுவனங்களின் அறிவுறுத்தல்களுக்கமைய உற்பத்தியாளர்கள் செயற்படுதல் ஊக்குவிக்கப்படுகிறது. மேலும், மதுபான நுகர்வின் பின்னர் அகற்றப்படும் வெற்றுப் போத்தல்கள் மற்றும் கான்களை அந்த அந்த இடங்களிலேயே போடுவதால் சூழல் மாசுபடுதலைத் தவிர்க்கும் பொருட்டு நாடு முழுவதும் உள்ள மதுபான விற்பனை நிலையங்களில் கூடைகள் பொருத்தப்பட்டன.

பேண்தகு அபிவிருத்தி இலக்கு 16 மற்றும் 17 இன் கீழ், சகலருக்கும் நீதி வழங்கும் வகையில் கைது செய்யப்படும் தனிநபர்களுக்கு சித்திரவதை மற்றும் துன்புறுத்தலுக்கு ஆளாகாமல் இருத்தலை உறுதி செய்யும் பொருட்டு சகல சீருடை அலுவலர்களுக்கும் தொடர்ச்சியாக அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அரச வருமானத்தைப் பாதுகாக்கும் பொருட்டு எடுக்கப்படும் சகல நடவடிக்கைகளிலும் இலஞ்சம் மற்றும் ஊழலை கணிசமானளவில் குறைக்க சகல கடமைகளையும் பொறுப்புடனும் வெளிப்படைத் தன்மையுடனும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, தொடர்ச்சியாக அலுவலர் பயிற்சிகள், இலஞ்சம்

மற்றும் ஊழலைத் தடுக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும் சட்ட வலுப்படுத்தல் அலுவலர்களுக்கு சமூக வன்முறையின்றி கடமையைச் செய்யத் தேவையான பயிற்சியை வழங்கவும் தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2030 அளவில் இலங்கை மதுவரித் திணைக்களத்தில் நிலையான அபிவிருத்தியின் முதன்மை இலக்குகளை அடைவதற்குச் சாத்தியமான சகல செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்கு மதுவரி ஆணையாளர் நாயகம் அடங்கலாக சகல அலுவலர்களும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றனர்.

### 5.2 நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடிப்படையில் இலங்கை மதுவரித் திணைக்களத்தின் செயற்பாடுகள் மற்றும் வளர்ச்சி

- நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு 2025 இன் செயற் திட்டத்திற்கு அவ்விலக்குகளை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ளது.

- 2025 இற்கான நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகள் மற்றும் செயற்பாடுகள் வருமாறு.

| இலக்குகள் | குறிக்கோள்கள் | அடைவுக் குறிகாட்டி | இது வரை எய்தப்பெறுகையின் முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0% - 49% | 50% - 70% | 75%- 100% |
| **இலக்கு - 01**<br>சகல இடத்திலும் சகல முறையிலும்<br>வறுமையை ஒழித்தல் | ➢ வினைத்திறனுடனும் பயனுறுதியுடனும் குறிப்பிட்ட வரி சேகரித்தலின் ஊடாக நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்பு வழங்குதல், பொருளாதார, சமூக அபிவிருத்திக்கும் உட்கட்டமைப்பு வசதி விருத்திக்கும் அவ்வரியை பொதுத் திறைசேரிக்கு உரிய காலத்தில் வரவு வைத்தல். | | | | √ |
| | ➢ சட்ட விரோத மதுபானங்கள் மற்றும் அபாயகரமான அவுடதங்களை வினைத்திறன் மிக்க முறையில் சட்ட வலுப்படுத்தலின் ஊடாக சமூகப் பாதுகாப்பை மேம்படுத்தல் மற்றும் வறுமையை ஒழித்தல். | | | | √ |
| | ➢ ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் கிராமங்களைத் தெரிவு செய்து மதுபானங்கள் மற்றும் அபாயகர அவுடதங்கள் பாவனை மற்றும் விளைவுகள் பற்றி தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக சமூக அபிவிருத்தியை ஏற்படுத்துதல். | | √ | | |
| | ➢ மதுபானம் மற்றும் சிகரட் உற்பத்திகளைக் கொள்வனவு செய்தலில் ஆர்வமின்மையை ஏற்படுத்தும் பொருட்டு வருடாந்த வரியை அதிகரித்தல் அல்லது விலையை அதிகரித்தலின் ஊடாக கிராமியப் பொருளாதாரத்தை மேம்படுத்துதல். | | | | √ |
| | ➢ 2022.02.31 ஆம் திகதிய 1999 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம், பீடி உற்பத்திக்கு புதிய வரியொன்று விதிக்கப்பட்டது. அதன் ஊடாக பீடிக் கொள்வனவை ஊக்குவிக்காமை மற்றும் கிடைக்கப் பெறும் வருமானத்தை அரசிறை வருமானத்தில் வரவு வைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்குதல் | | | | √ |
| | ➢ மதுபானம், புகையிலை நுகர்வு பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக மதுபான, புகையிலை நுகர்வை குறைத்தல் அல்லது குறைக்க நடவடிக்கை எடுத்தல் | | | | √ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **இலக்கு** - 03 எல்லோருக்கும் ஆரோக்கியமான வாழ்வைப் பேணுதல், சகல வயதினருக்கும் நல்வாழ்வை மேம்படுத்தல் | ➢ சட்டரீதியாக உற்பத்தி செய்யப்படும் மதுபானங்களின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கு இலங்கைத் தரநிர்ணய நிறுவகத்துடன் இணைந்து சகல மதுபானங்களுக்கும் தரங்களைத் தயாரித்தல் மற்றும் அத்தரங்களை வர்த்தமானி ஊடாக பகிரங்கப்படுத்த நவடிக்கை எடுத்தல் | | | | √ |
| | ➢ சுகாதார, வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு சட்ட விரோத மதுபான, புகையிலை உற்பத்தியைக் குறைத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் | | | | √ |
| | ➢ பயனுள்ள தடுப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் ஊடாக சமூகப் பாதுகாப்பை ஏற்படுத்தல் | | | | √ |
| | ➢ பொதுமக்களின் நல்வாழ்வு பொருட்டு அபாயகரமான போதைப்பொருட்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுத்தல் | | | | √ |
| | ➢ 21 வயதிலும் குறைந்த பிரிவினருக்கு மதுபான, புகையிலை உற்பத்திகளின் விற்பனையை கட்டுப்படுத்துதல் | | | | √ |
| | ➢ சட்ட விரோத கள் உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் நோக்கில் உரிய தரங்களை பனை, தென்னை, கித்துளின் பொருட்டு தயாரித்தலை 2023 இல் நிறைவு செய்தல் | | | √ | |
| | ➢ மனித உயிர்கள் மதுப்பழக்கத்தால் நெருக்கடிக்குள்ளாவதைத் தடுப்பதற்கு சகல மட்டத்திலுள்ள பிரஜைகளுக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல் | | | | √ |
| | ➢ பொதுமக்களின் சுகாதாரத்திற்குக் கேடு விளைவிக்கும் சூழல் மாசுபடலைத் தவிர்க்கும் பொருட்டு மதுபானம் பாவித்தபின் வீசும் போத்தல்கள், கான்களை சேகரித்து மீள் சுழற்சி செய்யும் பொருட்டு மதுவிற்பனை நிலையங்களில் கூடைகளைப் பொருத்துதல் | | | | √ |
| **இலக்கு** - 12 நிலையான உற்பத்தி மற்றும் நுகர்வு முறைகளைப் பாதுகாத்தல். | ➢ மதுபானங்கள், புகையிலை நுகர்வைக் கட்டுப்படுத்தலுக்கு பொதுமக்களிற்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்தல். | | | | √ |
| | ➢ சட்ட விரோத மதுபானங்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு வருடாந்த தனிமனித மதுபான நுகர்வைக் கணக்கெடுத்தல் மற்றும் அதற்கிணங்க தனிநபர் மதுபான நுகர்வைக் கட்டுப்படுத்தல். | | | | √ |
| | ➢ வரி நிர்வகித்தலை வசதிப்படுத்தல், சந்தைக்கு பதிலீடுகள் வருதலைக் கட்டுப்படுத்தல் மற்றும் சுகாதாரப் | | | | √ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பாதுகாப்பான மதுபானம் என்பன பொருட்டு பாதுகாப்பு ஸ்ரிக்கரை அறிமுகஞ் செய்தல்.<br><br>➢ தரத்தில் உயர்ந்த மதுபானம். புகையிலைகளை சான்றுப்படுத்தல் பொருட்டு மதுபான உற்பத்திச்சாலைகள், புகையிலை தொடர்பான உற்பத்திச்சாலைகளை வினைத்திறனுடன் மேற்பார்வை செய்தல்<br><br>➢ சகல மதுபான உற்பத்திச்சாலைகளுக்கும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பாதுகாப்பு சான்றிதழ் மற்றும் நீரின் தூய்மை பற்றிய(பொயிலர்) சான்றிதழ் என்பன வழங்குதற்கு நடவடிக்கை எடுத்தல். | | | | √<br><br>√ |
| **இலக்கு** - 16 நிலையான அபிவிருத்தி பொருட்டு அமைதியான, அனைத்தையும் உள்ளடக்கிய சமுகங்களை மேம்படுத்தல் மற்றும் அனைத்து மட்டங்களிலும் பயனுறுதி மிக்க, பொறுப்பு வாய்ந்த, அனைத்தையும் உள்ளடக்கிய நிறுவனங்களை கட்டியெழுப்புதல் | ➢ அபாயகரமான அவுடதங்கள், சட்ட விரோத மதுபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்தி தொடர்பில் பயன்மிக்க சட்ட அமுலாக்கலின் ஊடாக மக்களுக்கு அமைதியான சுற்றுச்சூழலைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்தல்.<br><br>➢ சகல அலுவலர்களுக்கும் சட்டத்திற்கமைய கடமைகளை மேற்கொள்ளத் தேவையான தெளிவுபடுத்தல் மற்றும் பயிற்சியை வழங்கல்.<br><br>➢ சகல அலுவலர்களும் பொறுப்புடன் நடவடிக்கை மேற்கொள்ள தேவையான சூழலை ஏற்படுத்தல்.<br><br>➢ சட்டப் பிரிவினை செயற்படுத்துவதன் ஊடாக சட்டரீதியான சூழலில் கடமையை மேற்கொள்ள பொருத்தமான சுற்றுச்சூழலை ஏற்படுத்தல்.<br><br>➢ சகல அலுவலர்களுக்கும் ஆகக்குறைந்தது ஒரு அலுவலருக்கு 12 மணித்தியாலம் அல்லது நிறுவனம்சார் அல்லது வெளியகப் பயிற்சியை வழங்குதல்.<br><br>➢ பெண் அலுவலர்களுக்கு பதவியுயர்விற்கு சம வாய்ப்பை வழங்கல் மற்றும் ஆண், பெண் இருபாலாருக்கும் நியாயமான சம்பளத்தை பெறுதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதன் மூலம் ஆண், பெண் வேறுபாட்டைக் கவனத்திற் கொள்ளாமை.<br><br>➢ சட்டரீதியாக உற்பத்தி செய்யப்படும் மதுபான, புகையிலைக் கைத்தொழிலிலிருந்து பெறும் வருமானத்தை தொடர்ச்சியாக விருத்தி செய்யும் பொருட்டும் பொருளாதார | | | | √<br><br>√<br><br>√<br><br>√<br><br>√<br><br>√<br><br>√ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அபிவிருத்தி பொருட்டும் வினைத்திறனுடன் நடவடிக்கை மேற்கொள்ளலின் ஊடாக வினைத்திறன் மிக்க வேலைவாய்ப்பை உறுதி செய்தல் | | | | |
| **இலக்கு** - 17<br>நிலையான அபிவிருத்தி பொருட்டு உலகளாவிய ஒத்துழைப்பைச் செயற்படுத்தலின் தேவையை வலுப்படுத்தல் மற்றும் புனர்வாழ்வு பெறுதல் | ➢ வருடாந்தம் சேகரிக்கும் மதுபான, புகையிலை வரி வருமானத்தை பொதுத் திறைசேரிக்கு முறைப்படி வழங்குதல் மற்றும் பாதுகாத்தல் | | | | √ |
| | ➢ புதிய தொழில்நுட்பத்தை இனங்காணலின் ஊடாக வருமானம் சேகரிக்கும் செயன்முறையை வினைத்திறன் மிக்கதாக்கும் பொருட்டு ERMS மற்றும் RASED முறைகளை அறிமுகஞ் செய்தல் | | | | √ |
| | ➢ உலகளவில் பிரசித்தமான பாதுகாப்பு ஏற்பாடான Fool Proof Sticker அல்லது digital printing இனைப் பயன்படுத்தி மதுவரி வருமானத்தைப் பாதுகாத்தல். | | | | √ |
| | ➢ பொதுமக்கள் தாங்கள் வாங்கும் மதுபானம் சட்டப்பூர்வ தரநிலைகளுக்கு இணங்கத் தயாரிக்கப்பட்டதா என்பதைச் சரிபார்க்க உதவும் மொபைல் செயலியை அறிமுகப்படுத்துதல் | | | √ | |

# அத்தியாயம் – 06

## மனிதவள விபரம்

6.1 பதவியணி முகாமைத்துவம்

6.2 இலங்கை மதுவரித் திணைக்களத்தின் செயலாற்றுகையை மனிதவளத்தில் ஏற்படும் குறை அல்லது மிகை பாதிக்கும் முறை

6.3 வெற்றிடங்கள் பற்றிய தகவல்கள்

6.4 மனித வள அபிவிருத்தி


6.4.1. நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பங்களிக்கும் முறை


6.4.2. மனித வள அபிவிருத்தி - பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

## 06.1 பதவியணி முகாமைத்துவம்

| | 2025.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு | | |
|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போதைய பதவியணி | பதவி வெற்றிடம் |
| சிரேஸ்ட | 70 | 19 | 51 |
| மூன்றாம் நிலை | 381 | 300 | 81 |
| இரண்டாம்நிலை | 1,050 | 767 | 283 |
| ஆரம்பநிலை | 148 | 54 | 94 |
| **மொத்தம்** | **1,649** | **1,140** | **509** |

## 06.2 இலங்கை மதுவரித் திணைக்களத்தின் செயலாற்றுகைக்கு மனிதவளத்தில் ஏற்படும் குறை அல்லது மிகை பாதிக்கும் முறை.




- 2025 ஆம் ஆண்டில், சிஷேட நிலையிலுள்ள 08 பிரதி மதுவரி ஆணையாளர் பதவிகளுக்கு சிரேஸ்ட அடிப்படையில் 05 உதவி மதுவரி ஆணையாளர் பதவிகளுக்கு கடமைகளை மேற்கொள்வதற்காக / மேவுகைக்காக நியமிக்கப்பட்டுள்ளனர்.

- 08 மதுவரி அத்தியட்சகர் பதவிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2025.05.31 ஆம் திகதி நடத்தப்பட்டு 2025.11.19 ஆம் திகதி நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டது.

- மதுவரி அத்தியட்சகர் பதவிகளுக்கு மிகைப் பணியாளர் அடிப்படையில் 67 பேரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு 2024.12.20 ஆம் திகதி விண்ணப்பங்கள் கோரப்பட்டதுடன் 2025.04.05 ஆம் திகதி ஆர்சேர்க்கும் பரீட்சை நடத்தப்பட்டது. ஆதில் தகுதி பெற்ற 18 பேருக்கு நேர்முகப் பரீட்சை 2025.07.08 ஆம் திகதி நடத்தப்பட்டதுடன், அதன் பெறுபேற்று ஆவணம் அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

- 31 பிரதான மதுவரிப் பரிசோதகர்களை 20 மதுவரி அத்தியட்சகர் பதவிகளில் கடமை நிறைவேற்றுகை பொருட்டும், 11 மதுவரி அத்தியட்சகர் பதவிகளில் கடமை மேவுகை பொருட்டும் நியமிக்கப்பட்டனர்.

- மூன்றாம் நிலை பதவி உயர்வுகளாக 16 பிரதான மதுவரிப் பரிசோதகர் பதவிகளுக்கு 2025.09.10 ஆம் திகதி ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது. மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் 22 மதுவரிப் பரிசோதகர்களுக்கு 2025.01.17 ஆம் திகதியும், திறந்த அடிப்படையில் 33 மதுவரிப் பரிசோதகர்களுக்கு 2025.11.03 ஆம் திகதியும் நியமனங்கள் வழங்கப்பட்டன.

- இரண்டாம் நிலை பதவி உயர்வுகளாக தேர்ச்சி அடிப்படையில் 27 மதுவரி சார்ஜன் மேஜ பதவிகளுக்கு 2025.10.13 ஆம் திகதி முதல் நியமனங்கள் வழங்கப்பட்டன.

- மதுவரி சார்ஜன் பதவிகளிற்கு 2021 இற்கு அமைய மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் 07 வெற்றிடங்கள் 2025.02.25 ஆம் திகதியும், 2022 இற்கு அமைய தேர்ச்சி அடிப்படையில் 14 வெற்றிடங்கள் 2025.04.30 ஆம் திகதியும் 2021, 2022 வருடங்களுக்கு அமைய மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் 22 பதவிகளுக்கு 2025.07.29 ஆம் திகதியும் நியமனங்கள் வழங்கப்பட்டன.

- இரண்டாம் நிலையிலுள்ள 100 மதுவரிக் காவலாளர்களை திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தகுதி வாய்ந்த 50 விண்ணப்பதாரருக்கு முதல் தொகுதியாக 2025.11.03 ஆம் திகதி முதல் செயல்வலுப்பெறும் வகையில் நியமனங்கள் வழங்கப்பட்டன

- 11 மதுவரிக் காவலாளர் பதவிகளிற்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 2024.07.24 ஆம் திகதி முதல்

செயல்வலுப்பெறும் வகையில் நியமனங்கள் வழங்கப்பட்டன.

- 12 மதுவரிக் காவலாளர் சாரதிகளிற்கு 2025.02.10 ஆம் திகதி நியமனங்கள் வழங்கப்பட்டன.
- அவ்வாறே திணைக்களத்தின் சகல அலுவலர்களுக்கும் 988 சம்பள ஆண்டேற்றங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அக்ரஹார காப்புறுதிக் கடன் முன்மொழிவுத் திட்டத்தின் கீழ் 122 விண்ணப்பங்களுக்கு நன்மைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், 35 சீருடை மற்றும் சிவில் அலுவலர்கள் ஓய்வு பெற்றதோடு அது தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## 6.3 வெற்றிடங்கள் பற்றிய தகவல்கள் - 2025

| பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | 2025.12.31 ஆம் திகதியன்று நிலைமை | வெற்றிடம் நிலவிய காலம் |
|---|---|---|---|
| மேலதிக மதுவரி ஆணையாளர் நாயகம் (வருமான நடவடிக்கை மற்றும் சட்ட வலுப்படுத்தல்) | 1 | இப்பதவிக்கு நியமிப்பதற்கு ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் தகைமை வாய்ந்த ஒருவர் இன்மையால் 2020.11.24 முதல் இப்பதவியில் வெற்றிடம் நிலவுகிறது. | 05 வருடங்கள் |
| மதுவரி ஆணையாளர் (சமூகப் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி) | 1 | 2022.12.31 முதல் இப்பதவியில் வெற்றிடம் நிலவுகிறது. | 03 வருடங்கள் |
| மதுவரி ஆணையாளர் (வருமான, நடவடிக்கை) | 1 | 2024.01.01 முதல் இப்பதவியில் வெற்றிடம் நிலவுகிறது | 02 வருடங்கள் |
| மதுவரி ஆணையாளர் (சட்ட வலுப்படுத்தல்) | 1 | 2022.12.31 முதல் இப்பதவியில் வெற்றிடம் நிலவுகிறது. | 03 வருடங்கள் |
| பிரதி மதுவரி ஆணையாளர் (நிர்வாகம்) | 1 | 2021.10.28 ஆம் திகதி முதல் இப்பதவியில் வெற்றிடம் நிலவுகிறது. | 04 வருடம் 02 மாதங்கள் |
| பிரதி மதுவரி ஆணையாளர் (மனித வளங்கள்) | 1 | 2022.12.31 ஆம் திகதி முதல் இப்பதவியில் வெற்றிடம் நிலவுகிறது. | 03 வருடங்கள் |
| பிரதி மதுவரி ஆணையாளர் (ஆதரவளிப்பு) | 1 | 2022.12.31 முதல் இப்பதவியில் வெற்றிடம் நிலவுகிறது. | 03 வருடங்கள் |
| பிரதி மதுவரி ஆணையாளர் (கற்கைகள் மற்றும் ஆராய்ச்சி) | 1 | 2023.12.28 முதல் இப்பதவியில் வெற்றிடம் நிலவுகிறது. | 02 வருடம் |
| பிரதி மதுவரி ஆணையாளர் (சமூகப் பாதுகாப்பு) | 1 | 2021.07.20 முதல் இப்பதவியில் வெற்றிடம் நிலவுகிறது. | 04 வருடங்கள் 05 மாதங்கள் |
| பிரதி மதுவரி ஆணையாளர் (வழங்கல் தொடர் ஒழுங்கமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்பம்) | 1 | 2022.12.31 முதல் இப்பதவியில் வெற்றிடம் நிலவுகிறது. | 03 வருடங்கள் |
| பிரதி மதுவரி ஆணையாளர் (சட்ட வலுப்படுத்தல்) | 1 | 2022.12.31 முதல் இப்பதவியில் வெற்றிடம் நிலவுகிறது. | 03 வருடங்கள் |
| பிரதி மதுவரி ஆணையாளர் (வருமான, உரிமம்) | 1 | 2022.12.31 முதல் இப்பதவியில் வெற்றிடம் நிலவுகிறது. | 03 வருடங்கள் |
| பிரதி மதுவரி ஆணையாளர் (சட்டம்) | 1 | 2022.12.31 முதல் இப்பதவியில் வெற்றிடம் நிலவுகிறது. | 03 வருடங்கள் |
| உதவி மதுவரி ஆணையாளர்கள் | 6 | சிரேஸ்ட மட்ட அலுவலர்கள் ஓய்வு பெற்றமையால் இப்பதவியில் வெற்றிடம் நிலவுகிறது. | |
| மதுவரி அத்தியட்சகர்கள் | 28 | சிரேஸ்ட மட்ட அலுவலர்கள் ஓய்வு பெற்றமையால் இப்பதவியில் வெற்றிடம் நிலவுகிறது. | . |

## 6.4 மனித வளங்கள் அபிவிருத்தி

இலங்கை மதுவரித் திணைக்களத்தின் மனித வளங்கள் பிரிவின் நடவடிக்கைகளாக, திணைக்களத்தின் மனிதவளங்களின் அறிவுத் தேர்ச்சி மற்றும் திறன் வளர்ச்சியை மேம்படுத்துதலையும் நிறுவனத்தினதும் தனிநபரினதும் அபிவிருத்தியை மேம்படுத்தலையும் சரியாக ஒழுங்கமைத்தலாகும். இப்பணியை மேற்கொள்ளும் பொருட்டு மனித வளப் பிரிவு மதுவரி ஆணையாளர் ஒருவரினதும் பிரதி மதுவரி ஆணையாளர் ஒருவரினதும் நேரடி மேற்பார்வையின் கீழ் செயற்படுகிறது. அதற்கு மேலதிகமாக மேலதிக மதுவரி ஆணையாளர் நாயகம் (வருமான/கொள்கைகள் மற்றும் நிர்வாகம்) இன் கீழ் மேற்பார்வையிடப்படுகிறது. மதுவரித் திணைக்களத்தின் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளும் பொருட்டு குருணாகலை மாவட்டத்தில் பனாதரகமவில் அமைந்துள்ள மதுவரிப் பயிற்சிக் கல்லூரி ஒன்று பயன்படுத்தப்படுவதுடன் தலைமை அலுவலகத்தின் கேட்போர் கூடமும் வெளியக நிறுவனங்களிலுள்ள நிலையங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

2025 இற்காகத் தயாரிக்கப்பட்ட செயற் திட்டத்தின் பிரகாரம் சகல சீருடை அலுவலர்கள், நாடளாவிய சேவை மற்றும் இணைந்த சேவை அலுவலர்களிற்கு ஆகக்குறைந்தது ஒரு அலுவலருக்கு 12 மணித்தியாலப் பயிற்சியை வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

2025 ஆம் ஆண்டில், சகல சீருடை ஊழியர்களுக்கும் சட்டம் மற்றும் திணைக்களத்தின் ஆவணங்கள் மற்றும் பொது நிர்வாக சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் பற்றிய முழு புரிதலும் அறிவும் வழங்கப்பட்டது. இத்திணைக்களத்தின் பதவிநிலை அலுவலர்களுக்கு அரச நிதி தொடர்பான விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. மேலும், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் சீருடைப் பணியாட்டொகுதியினர் ஆகியோருக்கு வெளி நிறுவனங்களின் மூலம் விசேட பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.18/2020 இன் பிரகாரம் ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் தமிழ் மொழியைக் கற்பதன் ஊடாக தமது மொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்வதற்காக இரண்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. அவை மாத்திரமன்றி உற்பத்திச்சாலைகள், வடிசாலைகள், குதங்களில் கடமை புரிகின்ற மற்றும் புகையிலை மற்றும் அற்ககோல் அதிகார சபையின் சட்ட விதிமுறைகள் தொடர்பான பயிற்சிகளும் நடத்தப்பட்டன.

மேலும் மனித வளங்களைப் பலப்படுத்தி விருத்தி செய்வதன் மூலம் இலக்குகளையும் நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய அலுவலர்களைக் கொண்ட அலுவலர்கள் குழாம் ஒன்றை உருவாக்குதல் மற்றும் அதற்கு மேலதிகமாக, வெளிச்சமூகத்தில் மதுபானம் மற்றும் போதைப்பொருள் பாவனை தொடர்பில் இளைஞர், பாடசாலை மாணவர்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களுக்காக போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

அதற்கமைய, 2025 ஆம் ஆண்டில், மனிதவள பிரிவு 27 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியுள்ளதுடன், ரூபா 19,956,972.24 செலவழித்து அனைத்து நடவடிக்கைகளையும் முகாமைத்துவம் செய்துள்ளது.
2025 ஆம் ஆண்டில் 27 பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டதுடன் அதில் அண்ணளவாக 800 அலுவலர்கள் பங்குபற்றியிருந்தனர். அவர்களுக்கு சான்றிதழும் வழங்கப்பட்டது. இந்த அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களும் மதுவரி ஆணையாளர் ஒருவரினதும் பிரதி மதுவரி ஆணையாளர் ஒருவரினதும் மற்றும் பிரதான மதுவரி பரிசோதகர், மதுவரிப் பரிசோதகர் ஒருவர், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர், ஒரு அலுவலக உதவியாளர் ஆகியோரின் ஊடாக மற்றும் மேலதிக மதுவரி ஆணையாளர் நாயகம் ஆகியோரின் நேரடி மேற்பார்வையின் கீழ் நடத்தப்படுகின்றன என்பது ஒரு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மனிதவளப் பிரிவால் நடத்தப்படும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய விபரம் கீழே 6.4.2 இல் தரப்பட்டுள்ளது.

### 6.4.1 நிறுவனத்தின் செயலாற்றுகையில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பங்களிக்கும் முறை

ஏதேனும் நிறுவனம் ஒன்றின் முக்கிய வளமாக இனங்காணப்படுவது மனித வளமாகும். அந்த நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுதற்கு மனித வளப் பிரிவு பொறுப்பாகவுள்ளது. நிறுவன நோக்கங்களைப் போன்றே பணியாளர் அபிலாசைகளையும் நிறைவேற்றும் பொருட்டு பணியாளர் பயிற்சி மற்றும் பணியாளர் மேம்பாடு என்பன அத்தியாவசிய மானவையாகக் கருதப்படுகிறது. பணியாளரின் வினைத்திறன் மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதற்கு பணியாளரின் தன்னம்பிக்கையை ஏற்படுத்துவதை பணியாளர் பயிற்சியின் ஊடாக எதிர்பார்க்கப்படுவதுடன், பணியாளரின் எதிர்கால செயல்திறன் வளர்ச்சிக்கு பணியாளரின் பொது இயலுமை விருத்தியின் மூலமாக எதிர்பார்க்கப்படுகிறது. இதன் ஊடாக அறிவுத் தேர்ச்சி, எண்ணக்கரு இற்றைப்படுத்தப்படல், பணியாளர் செயலாற்றுகை மற்றும் பணியாளர் வெளியீட்டைக் குறைத்தல், வேலைத் திருப்தியை உயர்த்துதல், பதவியுயர்விற்கான சந்தர்ப்பத்தை விரிவுபடுத்தல் ஆகிய பிரதி இலாபங்களை பயிற்சி மற்றும் விருத்தியின் மூலம் ஏற்படுத்தலாம்.

2025 இல் 27 பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டதுடன் அதில் 800 அலுவலர்கள் அண்ணளவாகப் பங்குபற்றியிருந்தனர். அவர்களுக்கு சான்றிதழும் வழங்கப்பட்டது.
இந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மேலதிகமாக, சமூக சேவையாக இளைஞர் யுவதிகளை போதைப்பொருள் மற்றும் முரண்பாடான சூழ்நிலைகளிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு பாடசாலைகள், இளைஞர் நிலையங்கள், மதுபான உற்பத்தி தொழிற்சாலைகள் மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்களில் சுமார் 30

போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் இலவசமாக நடைமுறைப்படுத்தப்பட்டன. இந்த வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்காக அரசாங்க ஒதுக்கீடுகள் இல்லாத போதிலும், மதுவரித் திணைக்களம் தனது சொந்த வளங்களுடன் இந்த முயற்சிகளை முன்னெடுத்துள்ளமை பாராட்டத்தக்க விடயமாகும். மேலும், மனித வளங்கள் பிரிவானது திணைக்களத்திற்குள்ளும் வெளியக அரச சார்பு நிறுவனங்களிலும் உள்ள அலுவலர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களை நியமித்துள்ளது.

இலங்கை மதுவரித் திணைக்களத்தின் மனிதவளப் பிரிவின் பணியாக மேலே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதன் மூலம் அறிவு, திறன்கள் மற்றும் மனப்பாங்குகளுடன் மதுவரித் திணைக்களத்தின் மனித வளங்களை விருத்தி செய்வதன் மூலம் நிறுவன மற்றும் தனிநபர் முன்னேற்றத்தை அடையும் நோக்கத்துடன் சரியாக ஒழுங்கமைக்கும் பணியை வழிநடத்துவதற்கு மனிதவளப் பிரிவு பணியாற்றி வருகின்றது

## 6.4.2 மனித வள அபிவிருத்தி - பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

| தொடரில | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர | பயிற்சி வகுப்பு நடைபெற்ற இடம் | பயிற்சி பெற்ற பதவியினர் எண்ணிக்கை | மொத்த முதலீடு (ரூ.) | வெளியீடு/பெற்ற அறிவு |
|---|---|---|---|---|---|
| 01 | உற்பத்திச்சாலைகள், குதங்கள், வடிசாலை பயிற்சி | தலைமை அலுவலகம் | 130 | ரூ.110,380.00 | ம.ஆ, ம.ப, ம.சா.மே, ம.அ, ம.கா - உற்பத்திசாலை ஆவணங்களை பராமரித்தல். |
| 02 | சகல பதவிகளிலும் பதவி உயர்வு பெற்ற அலுவலர்களின் பயிற்சி நெறி. | புனாதரகம மதுவரிப் பயிற்சிப் பாடசாலை | 35 | ரூ.1,484,911.51 | புதிய அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்(சாரதி) மற்றும் மதுவரிப் பரிசோதகராக பதவி உயத்தப்பட்ட அலுவலர்கள் - பணி தொடக்கப் பயிற்சி |
| 03 | **பயிற்சிப் பட்டறை பொருட்டு வெளியக நிறுவனங்களுக்கு அனுப்புதல்**<br>**1.** சமுக விஞ்ஞானம் பற்றிய பட்டப் பின்படிப்புப் பட்டம் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 1 | ரூ. 155,000.00 | பிரதி மதுவரி ஆணையாளர் (வருமானம்) |
| | 2. பெறுகை பற்றிய கற்கை மற்றும் செயற்கை நுண்ணறிவு பற்றிய கற்கைநெறி | தேசிய தொழிற் கல்வி நிறுவனம் | 3 | ரூ. 78,000.00 | பெறுகைப் பிரிவு அலுவலர்களும் மனித வளப் பிரிவு அலுவலர்களும் |
| | 3. கணக்காய்வு பற்றிய மாநாட்டில் பங்குபற்றுதல் | பனாதரகம மதுவரி பயிற்சி பாடசாலை | 1 | ரூ.20,000.00 | உள்ளக கணக்காய்வாரளர் |
| | 4. குற்றிவியல் சட்டம் பற்றிய கற்கைநெறி | தேசிய மன்றக் கல்லூரி | 37 | ரூ.1,379,400.00 | விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த அலுவலர்கள் |
| | 5. பெறுகை பற்றிய கற்கைநெறி Prag Service (Pvt) Ltd | Grand Oriental Hotel | 4 | ரூ.50,000.00 | பெறுகைப் பிரிவு அலுவலர்களுக்கு பயிற்சி வழங்குதல் |
| 04 | தகவல் அறியும் சட்டம் மற்றும் அரச அலுவலர்களின் ஒழுக்காற்று நடைமுறை பற்றிய பட்டறை | பனாதரகம மதுவரி பயிற்சி பாடசாலை | 36 | ரூ.201,240.00 | புதில் மற்றும் கடமை மேவுகை மதுவரி அத்தியட்சகர்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 05 | எண்ணக்கரு விருத்தி மற்றும் அலுவலக நடைமுறை குறித்த பயிற்சிப் பட்டறை | பனாதரகம மதுவரி பயிற்சி பாடசாலை | 26 | ரூ.218,390.00 | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் |
| 06 | மதுவரிக் கட்டளைச் சட்டத்தை திருத்துதல் பற்றிய கலந்துரையாடல் | பனாதரகம மதுவரி பயிற்சி பாடசாலை | 25 | ரூ.143,665.00 | தெரிவு செய்யப்பட்ட அலுவலர்கள் |
| 07 | வருடாந்த திட்டம், நிதி ஆவணங்கள், வருடாந்த அறிக்கைகள் மற்றும் முன்னேற்றம் பற்றிய கலந்துரையாடல் | தலைமை அலுவலகம் | 55 | ரூ.52,327.23 | பி.ம.ஆ., உ.ம.ஆ., மதுவரி நி. பொறுப்பாளர்கள் - வருடாந்த திட்டம், நிதி ஆவணங்கள், வருடாந்த அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கை |
| 08 | அபாயகர அவுடதங்கள் சட்டம், புதிய போதைப்பொருள்களை இனங்காணுதல் மற்றும் எண்ணக்கரு விருத்தி குறித்த பயிற்சிப் பட்டறை | தலைமை அலுவலகம் | 140 | ரூ.117,210.00 | மதுவரிக் காவலாளர்கள் - அபாயகர அவுடதங்கள் சட்டம், புதிய போதைப்பொருள்கள் பற்றிய அறிவு |
| 09 | பதவி உயர்த்தப்பட்ட மதுவரி சார்ஜன்களுக்கான பயிற்சி பட்டறை | பனாதரகம மதுவரி பயிற்சி பாடசாலை | 42 | ரூ.869,155.00 | பதவி உயர்த்தப்பட்ட மதுவரி சார்ஜன்கள் |
| 10 | பதவி உயர்த்தப்பட்ட மதுவரி பரிசோதகர்களுக்கான பயிற்சி பட்டறை | பனாதரகம மதுவரி பயிற்சி பாடசாலை | 16 | ரூ.247,650.00 | பதவி உயர்த்தப்பட்ட மதுவரி பரிசோதகர்கள் |
| 11 | பயிலுனர் மதுவரி பரிசோதகர்களுக்கு பயிற்சிப் பட்டறை | பனாதரகம மதுவரி பயிற்சி பாடசாலை | 49 | ரூ.7,894,232.50 | பயிலுனர் மதுவரிப் பரிசோதகர் - பணி தொடக்கப் பயிற்சி |
| 12 | பயிலுனர் மதுவரி காவலாளர்களுக்கு பயிற்சி பட்டறை | பனாதரகம மதுவரி பயிற்சி பாடசாலை | 33 | ரூ.6,814,661.00 | பயிலுனர் மதுவரிக் காவலாளர் - பணி தொடக்கப் பயிற்சி |
| 13 | தகவல் அறியும் உரிமைச் சட்ட ஏற்பாடுகள் பற்றிய தெளிவுபடுத்தல். | தலைமை அலுவலகம் | 57 | ரூ.8,250.00 | தலைமை அலுவலக அலுவலர்கள், மேல் மாகாண உதவி மதுவரி ஆணையாளர் அலுவலக அலுவலர்கள் |
| 14 | தமிழ் மொழித் தேர்ச்சி பயிற்சி நெறி 150 மணித்தியாலம்( அரசகரும மொழிகள் திணைக்களம்) | நிகழ்நிலை (online) | 80 | ரூ. 112,500.00 | மதுவரித் திணைக்களத்தின் சீருடை மற்றும் சிவில் அலுவலர்கள் |
| | | மொத்தம் | | **ரூ.19,956,972.24** | |

# அத்தியாயம் – 07

## இணக்கப்பாட்டு அறிக்கை

7.1 நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு பங்களிக்கும் முறை பற்றிய இணக்கப்பாட்டு அறிக்கை

## 7.1 நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு பங்களிக்கும் முறை பற்றிய இணக்கப்பாட்டு அறிக்கை

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டுநிலை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின் அதற்கான சிறு விளக்கம் | எதிர்காலத்தில் இணக்கமற்றமையை தவிர்ப்பதற்கு முன்வைக்கும் தீர்வு நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|
| 01 | **கீழே குறிப்பிட்ட நிதி அறிக்கைகள்/ கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.** | | | |
| 1.1 | வருடாந்த நிதி அறிக்கைகள் | இணக்கமானது | | |
| 1.2 | அரச அலுவலர்களின் முற்பணக் கணக்குகள் | இணக்கமானது | | |
| 1.3 | வணிக, உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக உற்பத்திக் கணக்குகள்) | ஏற்புடையதன்று. | 1. இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு இக்கணக்குகள் ஏற்புடையதன்று. | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்குகள் | ஏற்புடையதன்று. | 2. இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு இக்கணக்குகள் ஏற்புடையதன்று. | |
| 1.5 | சிறப்பு முற்பணக் கணக்குகள் | ஏற்புடையதன்று. | 3. இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு இக்கணக்குகள் ஏற்புடையதன்று. | |
| 1.6 | ஏனையவை | ஏற்புடையதன்று. | 4. இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு இக்கணக்குகள் ஏற்புடையதன்று. | |
| 02 | **புத்தகங்கள், பதிவுகளைப் பேணுகை (நி.ஒ.445)** | | | |
| 2.1 | அரச நிர்வாகச் சுற்றறிக்கை இல. 267/2018 இன் படி நிலையான சொத்துகளின் பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.2 | ஆள்சார் வேதனாதிகள் பதிவேடுகள்/ தனிநபர் ஊதிய அட்டைகள் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.3 | கணக்காய்வு வினாக்கள் பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.4 | உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.5 | சகல மாதாந்த கணக்கு சுருக்கங்கள் (CIGAS) தயாரிக்கப்பட்டு உரிய தினத்தில் பொதுத் திறைசேரிக்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 2.6 | காசோலைகள், காசுக் கட்டளைகள் பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.7 | பொருட் பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.8 | இருப்புப் பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.9 | இழப்புப் பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.10 | பொறுப்புகள் பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.11 | அடிக்கட்டைப் புத்தகங்களின் (GAN20) பதிவேடு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 03 | **நிதி கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.ஒ. 135)** | | | |
| 3.1 | நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன | இணக்கமானது | | |
| 3.2 | நிதி அதிகார கையளிப்பு பற்றி நிறுவனத்திற்கு தெரியப்படுத்தல் | இணக்கமானது | | |
| 3.3 | சகல கொடுக்கல் வாங்கலும் இரண்டு அல்லது அதனிலும் கூடிய அலுவலர்களின் ஊடாக இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டிருத்தல் | இணக்கமானது | | |
| 3.4 | 2014.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் படி சம்பளப் பட்டியல் மென்பொருள் பொதியை பயன்படுத்துகையில் கணக்காளர்களின் நிர்வாகத்தின் கீழ் நடவடிக்கை எடுத்தல் | இணக்கமானது | | |
| 04 | **வருடாந்த திட்டத்தை தயாரித்தல்** | | | |
| 4.1 | வருடாந்த செயற் திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.2 | வருடாந்த பெறுகை திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.3 | வருடாந்த உள்ளகக் கணக்காய்வு திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டை தயாரித்து தேசிய வரவுசெலவுத் திட்ட திணைக்களத்திற்கு (மேனு) உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 4.5 | வருடாந்த நிதிப்பாய்ச்சல் அறிக்கையை உரிய திகதியில் திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| **05** | **கணக்காய்வு வினாக்கள்** | | | |
| 5.1 | கணக்காய்வாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட தினத்தில் சகல கணக்காய்வு வினாக்களுக்கும் விடையளித்திருத்தல் | இணக்கமானது | | |
| **06** | **உள்ளகக் கணக்காய்வு** | | | |
| 6.1 | நி.ஓ. 134 (2) DMA/1-2019 இன்படி வருட ஆரம்பத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்து உள்ளகக் கணக்காய்வுத் திட்டங்களைத் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 6.2 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்தினுள் பதிலளிக்கப்பட்டது | இணக்கமானது | | |
| 6.3 | *2018* ஆம் ஆண்டின் *19* ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் *404(4)* ஆம் உப பிரிவின் பிரகாரம் அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளும் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. | இணக்கமானது | | |
| 6.4 | *134(3)* நிதி ஒழுங்கு விதியின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. | இணக்கமானது | | |
| **07** | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு** | | | |
| 7.1 | னுஆயு சுற்றறிக்கை 1-2019 இன் பிரகாரம் குறைந்தபட்சம் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கூட்டங்கள் நடைபெற்றது | இணக்கமானது | | |
| **08** | **சொத்து முகாமைத்துவம்** | | | |
| 8.1 | *01/2017* ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் *07* பந்தியின் பிரகாரம் சொத்து கொள்வனவு மற்றும் அகற்றல் தொடர்பிலான தகவல்கள் கொன்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது | இணக்கமானது | | |
| 8.2 | மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் *13* ஆம் பந்தியின் பிரகாரம் சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்தவும் அத்தகைய அதிகாரியை கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்பவும் பொருத்தமான தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுளார். | இணக்கமானது | | |
| 8.3 | *05/2016* ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு உரிய அறிக்கைகளானது கணக்காய்வாளர் அதிபதிக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டது | இணக்கமானது | | |
| 8.4 | சுற்றறிக்கையில் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் வெளிப்படுத்தப்பட்ட மேலதிகம் மற்றும் பற்றாக்குறைக்கான பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டது | இணக்கமானது | | |
| 8.5 | நிஓ. *772* இன் பிரகாரம் பாவனைக்கு உகந்ததற்ற பொருள்கள் அகற்றப்பட்டது | இணக்கமானது | | |
| **09** | **வாகன முகாமைத்துவம்** | | | |
| 9.1 | குழும வாகனங்களிற்கான நாளாந்த வாகன ஓட்ட அறிக்கை மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் நாயகத்திற்கு உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. | இணக்கமானது | | |
| 9.2 | பயன்பாடற்ற வாகனங்கள் பயன்பாடு நீக்கப்பட்டதன் *6* மாதங்களினுள் அகற்றப்பட்டது. | இணக்கமானது | | |
| 9.3 | வாகன ஏடுகள் பராமரிக்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டது. | இணக்கமானது | | |
| 9.4 | ஒவ்வொரு வாகன விபத்து தொடர்பில் நி.ஓ *103*, *104*, *109* மற்றும் *110* இற்கு அமைவாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. | இணக்கமானது | | |
| 9.5 | *2016.12.29* ஆம் திகதிய *2016/30* ஆம் அரச நிருவாக சுற்றிக்கையின் *3.1* ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைவாக வாகன எரிபொருள் பாவனை மீளப் பரீட்சிக்கப்பட்டது. | இணக்கமானது | | |
| 9.6 | குத்தகை காலம் முடிவடைந்த பின்னர் குத்தகை வாகனங்களின் உரித்து பதிவுப் புத்தகம் மாற்றப்பட்டது | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | **வங்கிக் கணக்குகளின் முகாமைத்துவம்** | | | |
| 10.1 | வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு, சான்றுபடுத்தப்பட்டு உரியநேரத்தில் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. | இணக்கமானது | | |
| 10.2 | மீளாய்வு ஆண்டு அல்லது முன்னைய ஆண்டுகளில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகள் தீர்க்கப்பட்டன | இணக்கமானது | | |
| 10.3 | வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்தல், சரிசெய்தல் மற்றும் ஒரு மாதத்தினுள் அத்தகைய நிலுவைகளைத் தீர்த்தல் | இணக்கமானது | | |
| 11 | **நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு** | | | |
| 11.1 | ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை அதன் வரையறைகள் மீறாது செலவளிக்கப்பட்டது. | இணக்கமானது | | |
| 11.2 | நி.ஒ. *94(1)* இன் பிரகாரம் ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும். | இணக்கமானது | | |
| 12 | **அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு** | | | |
| 12.1 | எல்லைகளுக்கு இணங்குதல் | இணக்கமானது | | |
| 12.2 | கடன்களில் கால ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. | இணக்கமானது | | |
| 12.3 | ஒருவருடத்திற்கு மேற்பட்ட கடன் மீதிகள் தீர்க்கப்பட்டன. | இணக்கமற்றது | பதவி வெறிதாக்கிய அலுவலர்களினதும் சேவை இடைநிறுத்தப்பட்ட அலுவலர்களினதும் கடன் நிலுவைகள் காணப்படுகின்றமை. | கடன் நிலுவைகளை அறவிடுதற்கு உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. |
| 13 | **பொது வைப்பு கணக்கு** | | | |
| 13.1 | காலம் பிந்திய வைப்புகள் தொடர்பில் நி.ஒ. *571* இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டது. | இணக்கமானது | | |
| 13.2 | பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல். | இணக்கமானது | | |
| 14 | **கட்டுநிதிக் கணக்கு** | | | |
| 14.1 | வருட முடிவில் காசுப் புத்தகத்தின் மீதி திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டது. | இணக்கமானது | | |
| 14.2 | நி.ஒ. *371* இன் பிரகாரம் வழங்கப்பட்ட தற்செயலான இடைக்கால வழங்கல் பணி முடிவடைந்த பின்னர் ஒரு மாதத்தினுள் தீர்க்கப்பட்டது. | இணக்கமானது | | |
| 14.3 | நி.ஒ. *371* இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட வரையறையை விஞ்சாத தற்காலிக இடைக்கால வழங்கல். | இணக்கமானது | | |
| 14.4 | மாதந்தம் திறைசேரி புத்தகத்துடன் கட்டுநிதி கணக்கின் மீதி கணக்கிணக்கம் செய்யப்பட்டது. | இணக்கமானது | | |
| 15 | **வருமானக் கணக்கு** | | | |
| 15.1 | ஒழுங்குவிதிகள் பிரகாரம் சேகரிக்கப்பட்ட வருமானத்தை மீளளிப்புச் செய்யப்படல் வேண்டும். | இணக்கமானது | | |
| 15.2 | திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காது நேரடியாக வருமான கணக்கில் வரவு வைக்கப்பட்டது. | இணக்கமானது | | |
| 15.3 | நி.ஒ *176* இன் பிரகாரம் வருமானத்தின் மீதியை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |
| 16 | **மனிதவள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல். | இணக்கமானது | | |
| 16.2 | அனைத்து ஆளணி அங்கத்தவர்களுக்கும் எழுத்து மூலம் கடமை நிரல் வழங்கப்பட்டது. | இணக்கமானது | | |
| 16.3 | *2017.09.20* ஆம் திகதிய *04/2017* ஆம் ஆளுனு சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு(MSD) சமர்ப்பிக்கப்பட்டது | இணக்கமானது | | |
| 17 | **பொது மக்களுக்கு தகவல் வழங்கல்** | | | |
| 17.1 | தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக தகவல் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு தகவல் பதிவேடு பராமரிக்கப்படுவதுடன் இற்றைப்படுத்தப்படுகின்றது | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 17.2 | நிறுவனத்தின் தகவல்கள் பொது மக்களுக்கு வலைத் தளத்தினூடாக அல்லது வேறு ஏதேனும் முறையில் வழங்கப்படுவதுடன் அரச அதிகாரிக்கெதிரான பாராட்டு/ குற்றச்சாட்டினை இந்த வலையத் தளத்தினூடாக அல்லதுவேறு ஏதேனும் முறையில் வழங்க வசதி செய்யப்பட்டுள்ளது | இணக்கமானது | | |
| 17.3 | சட்டத்தின் *08* மற்றும் *10* ஆம் பிரிவுகளின் பிரகாரம் வருடத்திற்கு இருமுறையான அறிக்கை மற்றும் ஆண்டறிக்கை சமர்ப்பிக்கபபட்டது. | இணக்கமானது | | |
| 18 | **பிரஜைகள் சாசனத்தை அமுல்படுத்தல்** | | | |
| 18.1 | பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் *05/2008* மற்றும் *05/2018(1)* ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவனமானது ஓர் பிரஜைகள் சாசனம்/ பிரஜைகள் வாடிக்கையாளர் சாசனத்தினை உருவாக்கி அமுல்படுத்தியது. | இணக்கமானது | | |
| 18.2 | சுற்றறிக்கையின் *2.3* ஆம் பந்தியின் பிரகாரம் ஓர் பிரஜைகள் சாசனம்/ பிரஜைகள் வாடிக்கையாளர் சாசனத்தினை உருவாக்குவதையும் அமுல்படுத்துவதையும் கண்காணிக்கவும் மதிப்பிடவும் நிறுவனத்தால் ஓர் முறைமை வடிவமைக்கப்பட்டுள்ளது | இணக்கமானது | | |
| 19 | **மனிதவள திட்டத்தை தயாரித்தல்** | | | |
| 19.1 | 2018.01.24 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இல. 02/2018 இனது இணைப்பு 2 இன் வடிவமைப்பின் பிரகாரம் மனிதவள திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது | இணக்கமானது | | |
| 19.2 | மேற்கூறப்பட்ட மனிதவள திட்டத்தில் ஆளனியினரின் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் ஒவ்வொரு வருடமும் *12* மணித்தியாளத்திற்கு குறையாத குறைந்தபட்ச பயிற்சிக்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. | இணக்கமானது | | |
| 19.3 | மேலே குறிப்பிட்ட சுற்றறிக்கை இணைப்பு 01 இல் காட்டப்பட்ட வடிவில் மொத்த அலுவலர்களிற்கும் வருடாந்த நிறைவேற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. | இணக்கமானது | | |
| 19.4 | மேற்படி சுற்றறிக்கையின் பந்தி 6.5 இன் படி மனிதவள மேம்பாட்டுத் திட்டம் தயாரித்தல், திறன் அபிவிருத்தி செயற்படுத்தல் தொடர்பில் ஒரு சிரேஸ்ட அலுவலர் நியமிக்கப்படல் | இணக்கமானது | | |
| 20 | **கணக்காய்வு பந்திகளிற்கான பொறுப்புக்கூறல்** | | | |
| 20.1 | முந்தைய வருடத்திற்கான கணக்காய்வாளர் நாயகத்தால் வெளியிடப்பட்ட கணக்காய்வுப் பத்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல் | இணக்கமானது. | | |

කාර්යසාධන වාර්තාව | செயல்திறன் அறிக்கை | PERFORMANCE REPORT | 2025